Registered as a Newspaper

பக்கங்கள் 16

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 150

செவ்வாய்க்கிழமை 25 ஏப்ரல் 2023

சித்திரை 12 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# தமிழர் தாயகம் இன்று முடங்கும்

## வர்த்தகம், போக்குவரத்து, கல்வி என அனைத்தும் ஸ்தம்பிதமாகும்

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 25**

**சிறிலங்கா அரசாங்கத்தால் கொண்டுவரப்படும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கைவிடக்கோரியும், தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்படும் பௌத்த - சிங்கள மயமாக்கலை உடனடியாக நிறுத்தக் கோரியும் இன்று முன்னெடுக்கப்படும் பொதுமுடக்கம் காரணமாக அனைத்துத்துறைகளும் ஸ்தம்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.**

»15

## இன்றைய பொதுமுடக்கத்துக்கு வர்த்தகசங்கங்கள் ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 25
பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு எதிராகவும், தமிழ் மக்களின் பாரம்பரிய வாழிடங்கள், மதத் தலங்கள், தொல்லியல் தலங்களை ஆக்கிரமித்து, பௌத்த - சிங்கள

»15

## அசௌகரியங்களைப் பொறுத்துக்கொள்க!

### கடற்றொழிலாளர்களும் ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 25
வடக்கு மற்றும் கிழக்கு வாழ் மீனவர்களையும் அவர்களின் ஜனநாயக குரல்வளையையும் நசுக்குவதற்காக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் பயன்படுத்தப்படும்.

»15

## தாயகத்தில் பொதுமுடக்கம்: ஒத்துழைப்பு வழங்கவேண்டும்

### நாடு கடந்த தமிழீழ அரசு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 25
தமிழர்தாயகத்தில் இன்றைய முழுமுடக்கத்துக்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் முழுமையான ஆதரவை தெரிவிப்பதாக அதன் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

»15

## தெற்கு அரசியல் அரங்கு இம்மாத முடிவில் அதிரும்

கொழும்பு, ஏப். 25
இந்த மாத முடிவுக்குள் தெற்கு அரசியல் அரங்கில் பல மாற்றங்கள் நிகழவுள்ளன என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன. அரசாங்கத்திலும், அரசாங்கத்துக்கு வெளியில் நாடாளு

»15

## கண்காணிப்புக்கமரா நெடுந்தீவில் தேவை!

### பாதுகாப்புக்கோரி மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 25
நெடுந்தீவின் பொதுஇடங்கள் இறங்குதுறை மற்றும் மனித நடமாட்டம் அதிகமாகவுள்ள இடங்கள், சுற்றுலாமையங்கள் அனைத்

»15

### பேக்கரி உற்பத்திப்பொருள்கள்

## விநியோகம் மட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், ஏப். 25
தமிழர் தாயகத்தில் இன்று முன்னெடுக்கப்படும் பொதுமுடக்கத்துக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாக யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.
'பொதுமுடக்கத்துக்கு நாம் ஏகமனதாக ஆதரவு வழங்குகின்றோம். எமது சேவை அத்தியாவசியமானது என்ற அடிப்படையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விநியோகம் முன்னெடுக்கப்படும்' என்று அந்தச் சங்கத்தின் செயலர் கா.பாஸ்கரன் தெரிவித்தார். (அ-ஒ.5)

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்: ஒன்றிணைந்தன எதிரணிகள்

கொழும்பு, ஏப். 25
பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உட்பட அரசின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளுக்கு எதிராக ஒன்றிணைந்து செயற்படுவதற்கு எதிர்க்கட்சிகள் இணக்கத்துக்கு வந்துள்ளன.
எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இந்த இணக்கம் எட்டப்பட்

»15

### வெடுக்குநாறிமலைவிவகாரம்;

## பக்தர்களின் வழிபாட்டை எவரும்நிறுத்தமுடியாது!

### வவுனியா நீதிமன்றம் உத்தரவு

விரிவு:- பக்.04

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது
ரூ. 112,000/=
அதிகபட்ச இரகசியதன்மை
சிநேகபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
011 200 88 88
சந்தை நிலைவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
செலான் தங்கக் கடன்
Fitch Rating: "A -" (lka)' கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி
செலான் வங்கி

## நெடுந்தீவுக் கோரக்கொலை: தடயப்பொருள்கள் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 25
நெடுந்தீவில் வயோதிபர்கள் ஐவரை கொடூரமாகக் கொலை செய்வதற்குப் பயன்படுத்திய கத்தி மற்றும் சந்தேகநபர் அணிந்திருந்த சாரம் என்பன கிணற்றிலிருந்து நேற்று மீட்கப்பட்டுள்ளன.
சந்தேகநபரை 2 நாள்கள் பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்ய ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்று நேற்றுமுன்தினம் அனுமதியளித்தது. அதனடிப்படையில் சந்தேகநபர் நேற்று அதிகாலை நெடுந்தீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

»15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மத நல்லிணக்கத்தை சிதைக்கிறது சிவசேனா

## கிறிஸ்தவ போதகர் சங்கம் குற்றச்சாட்டு

**கொழும்பு, ஏப். 25**

**எவரையும் வலிந்து மதமாற்றத்துக்கு உட்படுத்த முடியாது. இலங்கையிலுள்ள மனித உரிமைகள் ஏற்பாட்டின் பிரகாரம் ஒருவர் தனக்குப் பிடித்த மதத்தைப் பின்பற்ற முடியம். தெற்கிலே பொதுபலசேனா போன்று யாழ்ப்பாணத்தில் சிவசேனா அமைப்பு மக்களிடையே நல்லிணக்கத்தை சிதைக்கின்றது.**

இவ்வாறு இலங்கை கிறிஸ்தவ போதகர் சங்க வடக்கு - கிழக்கு தலைவர் விக்டர் ஸ்டாலின் ஆதங்கத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கை கிறிஸ்தவ போதகர் சங்கத்தினர் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: கிறிஸ்தவ ஆலயங்களுக்கு - கிறிஸ்தவ கூட்டங்களுக்கு - கிறிஸ்தவ போதகர்களுக்கு எதிராக கருத்துருவாக்கம் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த விடயத்தில் சிவசேனா போன்ற இந்து சமய மதவாதிகள் குறியாக உள்ளனர். இலங்கையில் மத சுதந்திரம் அனைவருக்கும் உண்டு. எவரையும் வலிந்து மதமாற்றம் செய்யமுடியாது. ஒருவர் தனக்குப் பிடித்த மதத்தைப் பின்பற்ற முடியும். பல வருடங்களாக இந்து - கிறிஸ்தவ சமயத்தவர்கள் சமாதானமாகவே வாழ்ந்து வருகின்றோம்.

இளையோர் போதைப்பொருளுக்கு அடிமையாகி, திசைமாறிச் செல்வதற்கு குரல் கொடுக்காத சிவசேனை கிறிஸ்தவத்துக்கு விரோதமாகச் செயற்படுகிறது.

இந்தியாவிலிருந்து ஒரு போதகர் வந்தபோது அவருக்கு எதிராக எதிர்ப்புக் காட்டப்பட்டது. 'மதமாற்றிகளே நுழையாதீர்கள்' என்று கூறப்பட்டது. சிவன் என்றால் அன்பு. இவர்கள் அன்பையா காட்டுகிறார்கள்? யாழ்ப்பாணத்தில் பெரும்பான்மையான இந்துக்கள் கிறிஸ்தவர்களை ஒடுக்குகிறார்கள்.

இவ்வாறான விடயங்களை சரி செய்யாவிட்டால் எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்தில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் போன்ற ஒன்று உருவாகும் நிலை தோற்றுவிக்கப்படும். இங்குள்ள இந்து மக்களை நாம் மதிக்கின்றோம் வழிபாடுகளை ஏற்கின்றோம்.

கிறிஸ்தவர்களை தவறாக சித்தரித்து எழுதுவதற்கு பத்திரிகைகள், அரசியல்வாதிகள் துணைபோகக் கூடாது. மதங்களிடையே நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு முயலவேண்டும் - என்றார். (ச)

# மாணவர்களுக்கு மாவா பாக்கு

## ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 25

ஊரெழு மற்றும் உரும்பிராய் பகுதிகளில் பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து மாவா போதைப் பாக்கை விற்பனை செய்து வந்த ஒருவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

ஊரெழுவைச் சேர்ந்த 23 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடமிருந்து 100 ரூபா பெறுமதியான 250 மாவா போதை பாக்கு பக்கெற்றுக்கள் கோப்பாய் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவா பாக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் சந்தேகநபரின் உறவினர்கள் முன்னர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-14-26)

# பாடசாலை நேரங்களில் பஸ் சேவையை நடத்துக!


## மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை

கிளிநொச்சி, ஏப். 25

கண்டாவளைப் பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலிருந்து உரிய நேரத்துக்கு பாடசாலைக்குச் செல்வதற்கு பேருந்து சேவையை முன்னெடுக்கவேண்டும் என்று அப்பகுதி மாணவர்களின் பெற்றோர் தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட கல்லாறு, பிரமந்தனாறு, மயில்வாகனபுரம் போன்ற பகுதிகளில் இருந்து பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் சுமார் 6 கிலோமீற்றர் தூரமளவுக்கு நடந்து சுண்டைக்குளம் பிரதான பேருந்துகளிலே பாடசாலைக்குச் சென்று வருகின்றனர்.

கல்லாறு பகுதியிலிருந்து கிளிநொச்சி நோக்கி காலை மாத்திரமே தனியார் பேருந்து ஒன்று சேவையில் ஈடுபடுகின்றது. தற்போதைய கடும் வெப்ப காலநிலையால் சுண்டைக்குளம் சந்திக்குச் சென்று பாடசாலைக்குச் செல்ல மாணவர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். அத்துடன் சில விசேட தேவையுடைய மாணவர்களும் நடந்து செல்லும் நிலை காணப்படுகின்றது. எனவே மாணவர்களின் நலன்கருதி பாடசாலை நேரத்தில் எமது பகுதிக்கு பேருந்து வசதிகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏற்படுத்தித் தர வேண்டும் - என்றனர். (ஒ-14-113)



# மருத்துவர் வீட்டில் கைக்குண்டு மீட்பு!

சாவகச்சேரி, ஏப். 25

சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோயில் பகுதியில் அமைந்துள்ள மருத்துவர் ஒருவரின் வீட்டிலிருந்து கைக்குண்டு ஒன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டது என்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டின் காணியை சுத்தம் செய்து கொண்டிருந்த வேளை கைக்குண்டு இருப்பதை மருத்துவர் அவதானித்தார்.

அதன்பின்னர் கைக்குண்டு இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. அதனையடுத்து இராணுவத்தினரால் சாவகச்சேரி பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்குச் சென்ற சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (ம-14)

# 'பட்டா' மோதியதில் இருவர் படுகாயம்!

வவுனியா, ஏப். 25

பட்டா வாகனம் மோதி மாணவன் உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து வவுனியா வேப்பங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

வேப்பங்குளம் பகுதியில் இருந்து மன்னார் வீதி வழியாக சைக்கிளில் சென்ற மாணவனுடன் அதே திசையால் வந்த பட்டா ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானது. அத்துடன் எதிர்த்திசையால் வந்த மோட்டார்சைக்கிளும் விபத்தில் சிக்கியது. இதையடுத்து மாணவனும், மோட்டார்சைக்கிளில் பயணித்தவரும் காயமடைந்த நிலையில் இருவரும் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். விபத்துத் தொடர்பான விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-14-18)

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு - மாத்தறைமிதிகம பகுதியில் ஹொட்டல் ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஹொட்டலின் உரிமையாளர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காரில் வந்த நால்வர் கொண்ட குழுவால் இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. கார் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-14-இ)

# பொலிஸார் எனத் தெரிவித்து டிப்பர் பறிமுதல் கோப்பாயைச் சேர்ந்தவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஏப். 25

லீசிங் நிலுவைப் பணம் செலுத்தவில்லை என்று தெரிவித்து தம்மை பொலிஸார் என அறிமுகப்படுத்தி டிப்பர் வாகனத்தைப் பறிமுதல் செய்த நிதி நிறுவனத்தின் பணியாளர் ஒருவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூவர் தேடப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவர் நிதி நிறுவனம் ஒன்றில் குத்தகைக்கு (லீசிங்கில்) டிப்பர் வாகனத்தைப் பெற்றுள்ளார்.

அவரது வாகனம் கடந்த சில நாள்களுக்கு முன்னர் கோப்பாய் வீதி சமிக்ஞை விளக்கில் தரித்து நின்றபோது அங்கு வந்த நால்வர் தம்மை பொலிஸார் எனக் கூறி லீசிங் தவணைப் பணம் செலுத்தவில்லை என்று தெரிவித்து டிப்பரை பறிமுதல் செய்து எடுத்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வாகனத்தை லீசிங்கில் கொள்வனவு செய்தவரினால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. தனது வாகனத்துக்குள் அலைபேசி ஒன்று, 50 ஆயிரம் ரூபாய் பணம் என்பன இருந்ததாக முறைப்பாட்டில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், கோப்பாயைச் சேர்ந்த ஒருவரை கைது செய்துள்ளதுடன் மூவரைத் தேடிவருகின்றனர்.

கைது செய்யப்பட்டவர் மீது சட்டத்துக்கு புறம்பாக வாகனத்தை பறிமுதல் செய்தமை, வாகனத்துக்குள் இருந்த பணம், அலைபேசியை கொள்ளையிட்டமை மற்றும் பொலிஸார் என மோசடியாக தம்மை அறிமுகப்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. (ம-26)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹர்த்தாலுக்கு ஆதரவுகோரி யாழ்ப்பாணத்தில் பரப்புரை!

யாழ்ப்பாணம், ஏப். 25

**பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கைவிடப்பட வேண்டும், தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட பௌத்த ஆக்கிரமிப்பு நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி தமிழர் தாயகத்தில் இன்று முன்னெடுக்கப்படும் பொது முடக்கத்துக்கு ஆதரவுகோரி நேற்றும், நேற்றுமுன்தினமும் தீவிர பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டன.**

தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராஜா, புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன், புளொட் அமைப்பின் முக்கியஸ்தரான கஜதீப்ன் ஆகியோரும், இளைஞர்களும், தன்னார்வலர்களும் இணைந்து மருதனார் மடம், பண்டத்தரிப்பு, மானிப்பாய், சங்கானை, இளவாலை மற்றும் அந்தப் பகுதிகளில் உள்ள சந்தைகள், வணிக வளாகங்களில் பொதுமுடக்கத்துக்கு ஆதரவுகோரி நேற்று முன்தினம் தீவிர பரப்புரையில் ஈடுபட்டனர். துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டன.



நேற்றையதினமும் பல்வேறு இடங்களிலும் பொதுஅமைப்புக்களும், தன்னார்வலர்களும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராகவும், பௌத்த ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் தீவிர பரப்புரைகளை முன்னெடுத்ததுடன், பொதுமுடக்கத்தின் அவசியத்தையும் வலியுறுத்தினர். (ம)



## வவுனியாவிலும் நேற்று ஹர்த்தாலுக்கு ஆதரவுகோரல்

வவுனியா, ஏப். 25

ஹர்த்தாலுக்கு ஆதரவுகோரி வவுனியா நகர்ப் பகுதியில் தமிழ்த் தேசியக் கட்சிகள், பொது அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் இணைந்து நேற்றுத் திங்கட்கிழமை துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தன.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் எமது இனத்துக்கு பாதகமான அதன் கடுமையான விளைவுகளை கருத்திற்கொண்டு அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும், எமது இனத்தின் இருப்பை கேள்விக்குறியாக்கும் பேரினவாத அரசின் திட்டமிட்ட செயற்பாடுகளை எதிர்க்கும் விதமாகவும் ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்குமாறு துண்டுப்பிரசுரத்தில் கோரப்பட்டுள்ளது. (ம-14-110)

## புதுக்குடியிருப்பு வர்த்தகர்கள் பொதுமுடக்கத்துக்கு ஆதரவு!

முல்லைத்தீவு, ஏப். 25

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், அதற்கு எதிராக முன்னெடுக்கப்படும் பொதுமுடக்கத்துக்கு புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தினர் ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு எமது இனத்துக்குப் பாதகமானதாக இருக்கின்றது.

அதன் கடுமையான விளைவுகளை கருத்திற்கொண்டு இந்த பொதுமுடக்கத்துக்கு ஆதரவை வழங்குகின்றோம் என்று புதுக்குடியிருப்பு வணிகர் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-14-19)

## பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் கையொப்பம் திரட்டல் தீவிரம்

கிளிநொச்சி, ஏப். 25

தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்துக்கு எதிராகக் கையொப்பம் திரட்டும் பணி, கிளிநொச்சி சேவைச் சந்தை பிரதான வாயிலில் நேற்றுத் திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

மக்கள் பலரும் கலந்துகொண்டு பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை எதிர்த்துக் கையொப்பமிட்டனர். கையொப்ப பிரதிகள் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ம-14-13)




கனநாளா யாழ்ப்பாணத்தில கைவரிசையைக் காட்டிக்கொண்டிருந்த மாடுபிடிக்கிற மாபியா பொலிஸிட்ட மாட்டியிருக்கு. றோட்டுவழியில கட்டியிருக்கிற இல்லாட்டி மேய்ஞ்சிட்டு களைச்சுப்போய் படுத்திருக்கிற பசுமாடுகளை இரவில வாகனத்தில போய், சங்கிலியால கட்டி, களவாய் இறைச்சியாக்கி, அதைத் துணிவாக் கொண்டுபோய் சந்தையளில உள்ள இறைச்சிக்கடையளில வித்திருக்கிறாங்கள். ஒரு மாட்டை அடிச்சால் ஒரு லட்சம் ரூபா லாபம் வருமாம். அதால மாட்டைப் பிடிக்கப் போற ஒவ்வொருத்தருக்கும் ஒருமாட்டுக்கு 10 ஆயிரம் ரூபா குடுபட்டிருக்கு. எப்பிடியும் ஒருநாளைக்கு நாலைஞ்சு மாடு பிடிபடுமாம். அதால ஒருநாளைக்கு மாடுபிடிக்கப்போனால் அம்பதாயிரத்துக்கு கிட்ட உழைக்கலாம். இப்பிடி சுளையா, ஒரு இரவிலேயே உழைக்கலாமெண்ட பேராசையில ஊரில உள்ள மாடுகளையெல்லாம் பிடிச்சு இந்தக் கும்பல் இறைச்சியாக்கி இருக்கு. ஆனால் அதெல்லாம் வெளியில தெரியவரேலை. 'ஆர் மாட்டை பிடிச்சது?' எண்டு பொலிஸ் யாழ்ப்பாணம் முழுக்கத் தேடித் திரியேக்க, இப்பிடி வலு சுதந்திரமா அந்தக் கும்பல் பசுமாடுகளைப் பிடிச்சு எப்பிடி இறைச்சியாக்கினது?

இஞ்சையுள்ள இறைச்சிக்கடையளில 'பி.எச்.ஐ மார்' சோதிச்சு, சீல் வைக்காத இறைச்சியை விக்கமுடியாது. மாடு எங்க வெட்டுப்படுகுதோ அங்கபோய் அந்த இறைச்சியை 'பி.எச்.ஐ மார்' சோதிச்சிருக்க வேணும். அதேமாதிரி 'சீல்' வைக்காத இறைச்சியை களவா விக்கினமோ எண்டு பாக்க வேண்டியதும் 'பி.எச்.ஐ மாரின்ர' பொறுப்பு. ஆனால் இந்த ரண்டு கடமையையும் 'பி.எச்.ஐ மார்' ஒழுங்காச் செய்யாதபடியாலதான் இப்பிடி இந்த மாடுபிடி மாபியாவால, கண்டபடி மாடுகளைக் களவாப் பிடிச்சு இறைச்சியாக்க முடிஞ்சிருக்கு.

இதுக்க இன்னொரு தகவலும் இருக்கு. இப்பிடி தங்கட கடமையை 'பி.எச்.ஐ மார்' செய்யாமல் இருக்க, அவைக்கு ஒரு தொகை ஒவ்வொரு முறையும் கைமாறி இருக்கெண்டும் பொலிஸிட்ட மாட்டுப்பட்டவை சொல்லியிருக்கினம் எண்டும் ஒரு கதை. ஒரு சாப்பாட்டுக்கடையில ஒரு இலையான் பறந்தாலே பறந்தடிச்சுப் போய் அதை 'சீல்' வைக்கத் தெரிஞ்சவைக்கு, அன்னதான மடத்தில வெளியில வைச்சு சமைச்சதுக்காக அந்த அன்னதான மடத்தையே மூடத் தெரிஞ்சவைக்கு இப்பிடி மாசக்கணக்கில கள்ள இறைச்சி வித்தவையைக் கண்டுபிடிக்க ஏலாமல் போனதெண்டதை நம்ப ஏலுமோ? அப்ப அந்த மாடுபிடி மாபியாவோட இந்தப் 'பி.எச்.ஐ மாருக்கும்' ஏதோ டீலிங் எண்டுதானே அர்த்தம். சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம் இப்பிடி காசை வாங்கிக் கொண்டு விட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தா குற்றங்கள் கூடாமல் என்னதான் செய்யும்? மாபியாக் கும்பலை மட்டுமில்லை, இப்பிடி அந்தக் கும்பலுக்கு உறுதுணையா இருந்தவையையும் உள்ளுக்க போட்டாத்தான் இனியும் மாடுகள் களவு போகாமல் இருக்கும் எண்டு சனங்கள் கதைக்குது. அதால தான் மாடுபிடிக் கும்பலைப் பிடிச்ச பிறகும், அதுக்கு உடந்தையா இருந்து ஊக்குவிச்சவையையும் பிடிக்கச்சொல்லி ஆடு, மாடு வளர்க்கிறவை நேற்று ஒரு ஆர்ப்பாட்டமும் செய்தவை. என்னதான் ஆர்ப்பாட்டம் செய்தாலும் எங்கட ஆக்களுக்கு உறைக்கவோ போகுது?



- பட்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*வெடுக்குநாறிமலை விவகாரம்;*

# பக்தர்களின் வழிபாட்டை எவரும் நிறுத்தமுடியாது!

## வவுனியா நீதிமன்றம் உத்தரவு

**வவுனியா, ஏப். 25**

**வெடுக்குநாறிமலை விவகாரத்தில் வழிபாடுகளை நடத்துவதற்கும், வணக்கங்களைச் செலுத்துவதற்கும் பக்தர்கள் செல்வதை எந்த அதிகாரிகளும் தடுக்கமுடியாது என்று வவுனியா நீதிவான் நீதிமன்றம் தெரிவித்துள்ளது என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

வெடுக்குநாறிமலையில் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிமன்றத்தால் இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சுமந்திரன் மேலும் தெரிவித்ததாவது:-

வெடுக்குநாறிமலையில் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் சிலைகளை உடைத்தமை சம்பந்தமான வழக்கு நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த வழக்கில் பொலிஸார் இனந்தெரியாத நபர்களால் வணக்கத்துக்குரிய விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பாகத் தெரிவித்துள்ளனர். ஆனால் எவரும் கைது செய்யப்படவில்லை. யாரென்று தெரியாது தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுப்பதாகச் சொல்கின்றனர்.

கடந்த தினத்தில் மேலதிகமாக அறிக்கைகள் சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டதற்கு அமைவாக, குறித்த இடத்தில் நீண்டகாலமாக பூசை வழிபாடுகள் இடம்பெற்றமைக்கான புகைப்பட ஆதாரங்களை அவர்களே சமர்ப்பித்துள்ளனர். அது மட்டுமன்றி இது தொல்லியலுக்குரிய பிரதேசமென்றும் இன்று (நேற்று) நாங்கள் செய்த விண்ணப்பத்துக்குப் பதில் அளிப்பதற்கு அரச சட்டத்தரணியின் உதவியை நாடியுள்ளதாகவும் கேட்டுள்ளனர்.

எமது அரசமைப்பின் உறுப்புரைகளின் கீழ் மத வழிபாடு என்பது எவராலும் மட்டுப்படுத்த முடியாத உரிமைகள். மரத்தையோ கல்லையோ வழிபடலாம். அதற்குப் பூரண உரித்துள்ளது. ஒரு மரம் வனப்பிரதேசத்தில் இருப்பதால் வணங்க முடியாது என எவரும் கூறமுடியாது. ஒரு கல் தொல்லியலுக்குரியது என்பதற்காக அதனை வணங்கமுடியாது என எவரும் கூறமுடியாது. அவ்வாறு சொல்வதாக இருந்தால் அனுராதபுரத்திலும், பொலனறுவையிலும் அவ்வாறான வழிபாடுகளை மேற்கொள்ள முடியாது. இந்த விடயங்கள் இன்று (நேற்று) நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்ட பின்னர் நீதிவான், 'வெடுக்குநாறி பிரதேசத்தில் வழிபாடுகளை நடத்துவதற்கு பக்தர்கள் செல்வதை எந்த அரச அதிகாரியும் தடுக்கக்கூடாது' என்று உத்தரவிட்டுள்ளார் - என்றார். (ம-110)

## நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 25

கனடிய எழுத்தாளர் வீணைமைந்தன் கே.ரி.சண்முகராஜாவின் 'மண்ணும் மனசும்', 'மறக்கத் தெரியாத மனசு', 'தமிழ்ச் சினிமாவில் மகாகவி பாரதி' ஆகிய மூன்று நூல்களின் வெளியீட்டு விழா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் 5 மணி வரை இடம்பெறவுள்ளது.

'மண்ணும் மனசும்' நூலின் வெளியீட்டுரையை சமூகவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் இரா. இராஜேஸ்கண்ணன், 'மறக்கத் தெரியாத மனசு' நூலின் வெளியீட்டுரையை முன்னாள் தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, 'தமிழ்ச் சினிமாவில் மகாகவி பாரதி பாடல்கள்' நூலின் வெளியீட்டுரையை இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுகன்யா அரவிந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ம-14)

## சொற்பொழிவு

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவஸ்ரீ. பால. திருகுணானந்தக் குருக்கள் நடத்தும் வாராந்த பெரிய புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர், ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோயில் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சேக்கிழார் பெருமானின் குருபூசையைத் தொடர்ந்து சைவப்புலவர் செ.த.குமரன் 'தொண்டர்களை முன்னர் வணங்கி பின்பு இறைவனை வணங்கும் நாயனார்' என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவு ஆற்றவுள்ளார் (ம-14)

# சோபகிருது

## தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள்

### கன்னி

சொந்த உழைப்பால் முன்னேறும் திறமைசாலி நீங்கள். உங்கள் ராசிக்கு5ஆவது ராசியில் புத்தாண்டு பிறந்திருக்கிறது. பழைய பிரச்சினைகள், வழக்குகள் கடன் தொல்லைகளில் இருந்து விடுபடுவீர்கள்.

25.8.23 வரை மற்றும் 20.12.23 முதல் வருடம் முடியும் வரை சனி 6ம் வீட்டிலேயே தொடர்வதால் பெரிய மனிதர்கள், கல்வியாளர்களின் நட்பு கிடைக்கும்.

21.4.23 வரை குரு பகவான் 7ல் தொடர்வதால் பிள்ளைகளால் பெருமை அதிகரிக்கும். மகனுக்கு நல்ல வேலை கிடைக்கும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். பூர்வீகச் சொத்தை உங்கள் ரசனைக்கேற்ப புதுப்பிப்பீர்கள். விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

22.4.23 முதல் வருடம் முடியும் வரை ராசிக்கு 8ல் சென்று குரு மறைவதால் வீண் அலைச்சல், இனம் புரியாத கவலை, ஒருவித பய உணர்வுகள் வந்து செல்லும். கர்ப்பிணிப் பெண்கள் நீண்ட தூரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. பூர்வீகச் சொத்தைச் சரியாகப் பராமரிக்க முடியவில்லையே என வருத்தப்படுவீர்கள்.

இந்த ஆண்டு தொடக்கம் முதல் 25.8.23 வரை மற்றும் 20.12.23 முதல் வருடம் முடியும் வரை சனி 6ஆம் வீட்டிலேயே தொடர்வதால் பெரிய மனிதர்கள், கல்வியாளர்களின் நட்பு கிடைக்கும். எதிர்பாராத வகையில் பணவரவு உண்டு. தாழ்வு மனப்பான்மை நீங்கும். உள்ளத்தில் மலர்ச்சி கூடும். வழக்கில் நல்ல தீர்ப்பு கிடைக்கும்.

26.8.23 முதல் 19.12.23 வரை உங்கள் ராசிக்கு சனி 5ல் நிற்பதால் பிள்ளைகளால் வீண் அலைச்சல் அதிகரிக்கும்.

8.3.24 முதல் 1.4.24 வரை சுக்ரன் 6ல் அமர்வதால் செலவுகள் அதிகரிக்கும். வாகனத்தை அதிவேகமாக இயக்க வேண்டாம்.

வியாபாரிகளே! இதுவரையிலும் போட்டியாளர்களுக்கு ஈடு கொடுக்கமுடியாமல் திணறினீர்கள். சிலரின் தவறான ஆலோசனையால் பல இழப்புகளைச் சந்தித்தீர்கள். இனி அந்த நிலை மாறும். உங்களின் திறமையால் இலாபம் ஈட்டுவீர்கள்.

உத்தியோகஸ்தர்களே! 22.4.23 முதல் குரு பகவான் 8ல் அமர்வதால் சிறு சிறு அவமானங்களும், வேலைச்சுமையும் அதிகரிக்கும். சில தருணங்களில் வேலையை விட்டுவிடலாமா என்றுகூட ஆதங்கம் வந்து போகும். அடிக்கடி விடுப்பு எடுக்க வேண்டாம்.

**மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு திடீர் வளர்ச்சியையும் பிள்ளைகள் மூலம் நிம்மதியையும் தருவதாக அமையும்.**

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுக்க வாய்ப்பு உண்டு. தொழில் முன்னேற்றம் கருதி முக்கியமான பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள். உத்தி யோகத்தில் உயர்வு உண்டு.

**இடபம்:** வருமானம் போதுமானதாக இருக்கும். திட்டமிட்ட காரியங்களைத் திட்டமிட்டபடியேசெய்து முடிப்பீர்கள். புதிய நண்பர்களின் அறிமுகத்தால் பொருள் வளத்தைப் பெருக்கிக்கொள்வீர்கள்.

**மிதுனம் :** பயணத்தால் பலன் கிடைக்கும் நாள். பெற்றோர்களின் பிரியம் கூடும். நினைத்த காரியத்தை நினைத்தபடியே செய்து முடிப்பீர்கள். நண்பர்கள் நல்ல தகவலைத் தருவர்.

**கடகம்:** உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டும் நாள். உற்சாகம் அதிகரிக்கும். தொழிலில் இருந்த தொல்லை அகலும். நேற்று பாதியில் நின்ற பணிகள் மீதியும் தொடரும்.

**சிம்மம்:** வளர்ச்சி கூடும் நாள். எதிர்பார்த்த காரியம் எதிர்பார்த்தபடியே நடை பெறும். குடும்ப நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் சம்பள உயர்வு பற்றிய தகவல் கிடைக்கலாம்.

**கன்னி:** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்தி வந்து சேரும் நாள். வார்த்தைகளில் நிதானம் தேவை. வியாபாரம் வழக்கம் போலவே இருக்கும்.

**துலாம்:** வரவைக் காட்டிலும் செலவு கூடும். பக்கத்து வீட்டாரைப் பகைத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாக நேரிடும்.

**விருச்சிகம்:** மதியத்துக்குமேல் மனக் குழப்பம் ஏற்படும் நாள். பிறருக்கு பொறுப்பு சொல்வதால் பிரச்சினை ஏற்படலாம். உத்தியோகத்தில் கூடுதல் பொறுப்புகளால் நிம்மதி குறையும்.

**தனுசு:** தாராளமாக செலவிட்டு மகிழும் நாள். தடைகள் அகலும். தொழிலுக்காக எடுத்த முயற்சி வெற்றி தரும். தொலை தூரப் பயணங்கள் உறுதியாகும்.

**மகரம்:** புதிய பாதை புலப்படும் நாள். பூர்வீக சொத்துகள் சம்பந்தமாக எடுத்த முயற்சி அனுகூலமாக இருக்கும். நண்பர்கள் நல்ல தகவலைக் கொண்டு வந்து தருவர்.

**கும்பம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள். தெய்வீக நாட்டம் அதிகரிக்கும். பிறர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். முக்கியமான முடிவு எடுப்பதில் பொறுமை அவசியம்.

**மீனம்:** செல்வாக்கு மேலோங்கும் நாள். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். பொருள் வரவு திருப்தி தரும். கல்யாண வாய்ப்புகள் கைகூடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## எதிர்ப்பு பலமாகட்டும்!

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆபத்தான அம்சங்களை நீக்குமாறு வலியுறுத்தியும், தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்படும் பௌத்த மயமாக்கல், சிங்களத் திணிப்பு, காணி பிடிப்பு, தொன்மைக்கால வழிபாட்டுத் தலங்கள் அழிப்பு என்பவற்றுக்கு எதிராகவும் இன்று பொதுமுடக்கம் ஒன்றுக்குச் செல்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள், சிவில் சமூக அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வணிகர் சங்கங்கள் என்று பல தரப்பினரும் ஓரணியில் நின்று இந்தப் பொதுமுடக்கத்தை முன்னெடுக்கத் தீர்மானித்திருக்கின்றனர். தமிழர்களின் இருப்பை உறுதிப்படுத்துவதற்கும், அரசாங்கத்துக்கு எதிராக நாம் கொண்டிருக்கும் அதிருப்தியைப் பட்டவர்த்தனமாக்குவதற்கும் இந்தப் பொதுமுடக்கம் எமக்கு இன்று காலத் தேவையானதும் தவிர்க்க முடியாததுமாகவே அமைந்திருக்கின்றது என்பதே உண்மையும் யதார்த்தமுமாகும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் நொந்து நூலாகிப்போன இனமாகத் தமிழினமே காணப்படுகின்றது. ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் ஏராளமான முஸ்லிம் இளைஞர்கள் வகைதொகையின்றிக் கைதுசெய்யப்படவும், கோத்தாபய அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தின் பின்னர் பலநூறு சிங்கள இளைஞர்கள் சிறையில் அடைக்கப்படவும் இந்தச் சட்டம் காரணமாக இருந்தபோதிலும், அதன் கோரமுகத்தை முழுமையாக அனுபவித்தவர்கள் தமிழ் இளைஞர்களே. பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிரான போராட்டம் தென்னிலங்கையில் கடந்த வருடத்தின் பிற்பகுதியில்தான் தீவிரம் பெற்றது. ஆனால், இந்தச் சட்டத்தின் 'அபத்தத்தை' கோடு காட்டி தமிழினம் பல தசாப்தங்களாகவே போராடி வருகின்றது.


இவ்வாறிருக்கையில், தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விடவும், அதற்குப் பதிலாகக் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் கொடியதாகவும் ஆபத்தான அம்சங்களைக் கொண்டதாகவுமே இருக்கின்றது. அது அரசாங்கத்துக்கு எதிரான சாதாரணப் போராட்டங்களைக் கூட பயங்கரவாதம் என்ற முத்திரையைக் குத்தியே நோக்குகின்றது என்று உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சட்டவல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற அமைப்புகளும் இந்தச் சட்டம் வாபஸ் பெறப்படவேண்டும் என அழுத்தம் கொடுத்து வருகின்றன. இது உண்மையாயின், இந்தச் சட்டம் தமிழர்களையும் இதர சிறுபான்மைச் சமூகத்தையும்தான் வதைத்தெறியப் போகின்றது. ஆகவே, எம் இளைஞர்களுக்காகவும் எதிர்காலச் சந்ததிக்காகவும் எம் உரிமைகளைக் காப்பாற்றுவதற்காகவும் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்துக்கு எதிராகப் போராடவேண்டிய கட்டாயத்தில் நாமிருக்கின்றோம். ஓர் ஆற்றின் நீரோட்டத்தை வழிமறித்துவிட்டு, சட்டெனத் திறந்துவிட்டால் அது எவ்வாறு எதிர்ப்படும் அனைத்தையும் அடித்துச் செல்லுமோ, அவ்வாறுதான் 'சிங்கள – பௌத்த பேரினவாதம்' இப்போது செயலாற்றி வருகின்றது. 2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதன் பின்னர், தமிழர் தாயகத்துக்கு எதிராக பௌத்த திணிப்பும், காணி பிடிப்பும், சிங்கள மயமாக்கலும் பலமுனைப் போராகத் தொடுக்கப்பட்டுள்ளன. நாளுக்குநாள் இந்தப் பலமுனைப் போராட்டம் தீவிரம் பெற்றே வருகின்றது. அதிலும் குறிப்பாக ஆதி சைவ ஆலயங்கள் அப்பட்டமாக அழிக்கப்படுவதும், தமிழர் மரபுரிமைச் சின்னங்கள் உடைத்தெறியப்படுவதும் இப்போதெல்லாம் சர்வசாதாரணமாக இடம்பெறும் விடயங்களாக ஆகிவிட்டன. இவ்வாறானதொரு நிலையில் இந்த பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்பு மனோநிலைக்கு எதிராகவும் இன்று துலங்கலாற்ற வேண்டியிருக்கின்றது.

தமிழர் தாயகம் காலத்துக்குக் காலம் ஹர்த்தால்களையும், பொதுமுடக்கங்களையும் சந்தித்துள்ள போதிலும் இம்முறை அழைப்பு விடுக்கப்பட்டுள்ள பொதுமுடக்கம் கொஞ்சம் வேறுபட்டது. ஓரிரு தமிழ்த் தேசியக் கட்சிகளைவிடவும் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் நிற்கின்றன. பொதுஅமைப்புக்கள், வணிகர்கள் எனப் பலரும் அரசாங்கத்துக்கு எதிரான எதிர்ப்பு மனோநிலையை அப்பட்டமாக வெளிப்படுத்தத் தயாராகவே உள்ளனர். எல்லாவற்றையும் விட இந்தப் பொதுமுடக்கத்துக்காக முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் கனதியாக உள்ளன. இவ்வாறானதொரு பின்னணியில், இன்றைய போராட்டத்தை முழுமையாக வெற்றி பெறச் செய்யவேண்டியது எம்முன்னால் உள்ள பெரும் கடமையுமாகும்.

**நாளொரு நல்வார்த்தை**

"பகை, பொறாமை ஆகியவற்றை வெளியிட்டால் அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும்"

– சுவாமி விவேகானந்தர்



# பனைவளத்தைக் காப்பதற்கு சிறப்பு வேலைத்திட்டம்

**யாழ்ப்பாணம், ஏப். 25**

**வடக்கு மாகாணத்தில் பனை வளம் அழிக்கப்பட்டுவரும் நிலையில், பனை வளத்தைக் காப்பதற்காக சிறப்பு வேலைத்திட்டமொன்றை பனை அபிவிருத்திச்சபை மற்றும் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை என்பன இணைந்து முன்னெடுக்கவுள்ளன.**

இது தொடர்பில் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் யாழ். பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தெரிவித்ததாவது:

வடமாகாணத்தின் வளங்களாக பனை, தென்னை இரண்டும் இரண்டு கண்களாகக் காணப்படுகின்றன. ஒப்பீட்டளவில் பனை வளத்தின் இருப்பு தற்போது குறைந்து கொண்டு செல்கின்றது. பல இடங்களில் பனைகள் வெட்டப்பட்டு தென்னைகள் பயிரிடப்படுகின்றன. இவ்வாறிருக்கையில், பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகளுக்கு அமைய தென்னை மற்றும் பனைச் செய்கையை ஒன்றாக இணைந்து முன்னெடுப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான திட்டத்தை பனை அபிவிருத்திச்சபையும், தென்னைப் பயிர்ச் செய்கைச்சபையும் இணைந்து விரைவில் கொண்டுவரவுள்ளன - என்றார். (ம-26)

# ஜப்பானியப் பண்ணைகளுக்கு இலங்கைத் தொழிலாளர்கள்

கொழும்பு, ஏப். 25

ஜப்பானியப் பண்ணைகளில் வேலை செய்வதற்கு இலங்கையிலிருந்து தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஜப்பானிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜப்பானின் புறநகர்ப் பண்ணைகளில் வேலைசெய்வதற்கு தற்போது தொழிலாளர்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதையடுத்தே இலங்கையிலிருந்து தொழிலாளர்களை வரவழைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனமான பேர்சல் ஹோல்டிங்ஸ் தெற்காசிய, தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து அறுவடை வேலைகளுக்கு தொழிலாளர்களை அழைக்கத் திட்டமிட்டுள்ளது. விவசாயக் கல்லூரிகளில் பயிற்சி பெற்றவர்களையே இந்த நிறுவனம் தெரிவு செய்யவுள்ளது. இவ்வாறு தெரிவு செய்யப்படும் தொழிலாளர்களுக்கு தற்காலிக திறன்சார் தொழிலாளர் விசா வழங்கப்படும். தொழிலாளர்கள் ஜப்பானிய மொழிப் பரீட்சைக்கும் திறன்சார் பரீட்சைக்கும் தோற்ற வேண்டும். ஜப்பானுக்குத் தெரிவு செய்யப்படும் தொழிலாளர்களை இரண்டு வகையாக தெரிவு செய்வதற்கு பேர்சல் நிறுவனம் தீர்மானித்துள்ளது. முதலாவது வகையினருக்கு ஐந்து வருட விசா வழங்கப்படும். அவர்கள் தம்முடன் தமது குடும்பத்தினரை அழைத்துச்செல்ல முடியாது. இரண்டாவது வகையினருக்கு பத்து வருட விசா வழங்கப்படும் அவர்கள் தமது குடும்பத்தினரையும் தம்முடன் அழைத்துச்செல்ல முடியும். (ம-6)

**நாளை** 26.04.2023 புதன்கிழமை சித்திரை 13

சுபநேரம் : 04.29 – 05.59

ராகுகாலம் : 11.59 – 01.29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை ஈயின் தாக்கம் காற்றுக் காலத்தில் கூடும்

## தென்னை பயிர்ச்செய்கைசபை எச்சரிப்பு

**யாழ்ப்பாணம், ஏப் 25**


**வடக்கு மாகாணத்தில் இதுவரை 6 ஆயிரம் தென்னை மரங்களில் வெள்ளை ஈயின் தாக்கம் கண்டறியப்பட்ட நிலையில் அடுத்து வரும் மாதம் காற்று வீசும் காலமென்பதால் இந்தத் தாக்கத்தின் பரவல் அதிகரிக்கக் கூடும் என வடமாகாண தென்னை பயிர்ச்செய்கைசபையின் பிராந்திய முகாமையாளர் தேவராஜா வைகுந்தன் எச்சரித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்தில் இதுவரை 6 ஆயிரம் தென்னை மரங்களில் வெள்ளை ஈயின் தாக்கம் கண்டறியப்பட்டது. 2 ஆயிரத்து 500 தென்னைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் நல்லூர் மற்றும் யாழ்.பிரதேசசெயலகப் பிரிவுகளிலுள்ள தென்னைகளிலேயே அதிகளவு பாதிப்பு நிகழ்ந்துள்ளது. கோப்பாய் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் பிரிவுகளில் தாக்கம் குறைவு.

வெள்ளை ஈயின் தாக்கத்தைத் கட்டுப்படுத்தல் செயற்றிட்டத்தை - விழிப்புணர்வை கிராமம் கிராமமாக முன்னெடுத்து வருகின்றோம்.

இதுவரை வடக்கு மாகாணத்தில் 2 ஆயிரத்து 500 தென்னைகளுக்கு முழுமையாக சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் யாழ்.



மாவட்டத்தில் ஆயிரத்து 800 தென்னைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவில் சிகிச்சை முழுமையாக நிறைவடைந்துள்ளது.

தென்னைகளை 75 சதவீதமாக வெள்ளை ஈ பாதித்தால் அதற்கென பரிந்துரைக்கப்பட்ட இரசாயனத்தைக் கட்டாயம் பொதுமக்கள் பாவிக்கவேண்டும். மாறாக வேப்பெண்ணெய் கரைசல் கோதுமைமா கரைசல் மற்றும் நீர்விசிறல் மூலமும் தடுக்கவேண்டும். உங்களுடைய இடத்தில் வெள்ளை ஈ தென்னைகளில் கண்டறியப்பட்டால் யாழ். முத்திரை சந்தியில் காணப்படும் எங்கள் சேவை நிலையத்தில் முறைப்பாடு செய்யுங்கள். அத்துடன் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலுமுள்ள கமநல சேவைகள் நிலையங்களுக்கும் தெரியப்படுத்துங்கள்.

எதிர்காலத்தில் மனிதர்களுக்கும் சுவாசநோய் உள்ளிட்ட பாதிப்புக்களை இந்த வெள்ளை ஈயின் தாக்கம் ஏற்படுத்தக்கூடும். தேங்காய் விலையுயர்வில் எதிர்காலத்தில் தாக்கம் செலுத்தும்.

அடுத்த மாதம் காற்று வெகுவாக வீசும் காலமென்பதால் கூடுதலாக பரவக்கூடும். தெற்கேயிருந்து வருபவர்கள் மூலமும் பரவலாம். ஆகவே மக்கள் அவதானத்துடன் செயற்பட்டு வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்த ஒன்றிணைய .வேண்டும் - என்றார். (ச-125)



## திருவள்ளுவர் விழா

சாவகச்சேரி, ஏப். 25
இலங்கை திருவள்ளுவர் மன்றத்தின் ஏற்பாட்டில் திருவள்ளுவர் விழா, உரும்பிராய் கற்பக விநாயகர் கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

மன்றத் தலைவர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெற்ற விழாவில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் கலந்துகொண்டார். (ம-14)

## முல்லை.வவுனிக்குளத்தின் கீழ் 204 ஏக்கரிலேயே சிறுபோகம்!

### விவசாயிகள் ஏமாற்றம்

முல்லைத்தீவு, ஏப். 25
முல்லைத்தீவு மாவட்ட வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள 12 குளங்களுக்கும் போதிய நீர்வரத்தின்மையால் சிறுபோகம் செய்யப்படும் ஏக்கர் 204 ஏக்கராக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் ஏனைய விவசாயிகள் சிறுபோகம் மேற்கொள்ள முடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மாநாட்டு மண்டபத்தில் இந்த ஆண்டுக்கான சிறுபோக செய்கைக் கூட்டம் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் இந்த ஆண்டுக்கான சிறுபோக செய்கைக்கு வவுனிக்குளத்தின் நீர்மட்டம் வெகுவாக குறைந்து காணப்படுகின்றமையால் 204 ஏக்கரில் சிறுபோக செய்கை, 400 ஏக்கரில் சிறுதானியப் பயிர் செய்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் தெரிவிக்கையில்,
வவுனிக்குளத்தின் கீழ் 6 ஆயிரத்து 60 ஏக்கர் நெற்செய்கை காணிகள் பதிவில் காணப்படுகிறது. மழை பெய்தமையால் குளத்தின் நீர்மட்டம் தற்போது 12.5 அடியாகக் காணப்படுகிறது. நீர்வரத்துக் குறைவால் 204 ஏக்கரிலேயே சிறுபோகம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஏனைய விவசாயக் காணிகளில் இந்த முறை சிறுபோகச் செய்கையை மேற்கொள்ள முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

பொருளாதார விலையேற்றம் உள்ளிட்ட இடர்களை சந்தித்துள்ள நிலையில் இயற்கையும் ஏமாற்றியுள்ளது - என்றனர். (ச-19)



## நுங்கு விற்பனை யாழில் சூடுபிடிப்பு

நுங்கு விற்பனை யாழில் சூடுபிடித்துக் காணப்படுகின்றது. தற்போது அதிகரித்துக் காணப்படும் வெப்பநிலை காரணமாக உடல் சூட்டைத் தணிப்பதற்காக பலரும் நுங்கை ஆர்வத்துடன் கொள்வனவு செய்கின்றனர். யாழ். செம்மணி வீதி, அரியாலை மற்றும் யாழ். நகர் உள்ளிட்ட பல பகுதிகளில் நுங்கு விற்பனை சூடுபிடித்துக் காணப்படுகிறது. ஒரு நுங்கு 100 ரூபா முதல் 150 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. (ம-14)




## யாழ். போதனா மருத்துவமனைக்கு லபரஸ்கோப் இயந்திரம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 25
சர்வதேச மருத்துவ நல அமைப்பின் ஒருங்கிணைப்பில் அமெரிக்காவின் பிரபல தமிழ் வர்த்தகர் ராஜ் ராஜரட்ணத்தின் 5 கோடி ரூபா நிதி அனுசரணையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குப் புதிய லபரஸ்கோப் (Laparoscope) இயந்திரம் கடந்த சனிக்கிழமை கையளிக்கப்பட்டது. இந்த இயந்திரம் மூலம் மேற்கொள்ளப்படும் சத்திர சிகிச்சையின் பின்னர் நோயாளி மிக விரைவாகக் குணமடைந்து விடுவார். சத்திரசிகிச்சை நிபுணர்கள் நுட்பமாக இந்த சிகிச்சையைச் செய்வதால் நோயாளிகளுக்கு மிகவும் சரியான முறையிலான சிகிச்சைப் பலன் கிடைக்கும் என யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி 'த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். (எ-14,66)

## கடும் காற்றினால் வீடுகள் சேதம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் வீசிய கடும் காற்றால் வீடுகள் பல சேதமடைந்துள்ளன. கடந்த வியாழக்கிழமை வீசிய கடும் காற்றால் ஒட்டுசுட்டான் முத்துஐயன்கட்டு, ஜீவநகர் மாதிரி கிராமம் ஆகிய பகுதிகளிலும், மறுநாள் வெள்ளிக்கிழமை வீசிய காற்றால் முத்து[illegible] பகுதியிலும் உள்ள வீடுகளுக்கு [illegible] ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-14,19)

## இஸ்லாமியர்களுக்கு உலருணவுப் பொதிகள்

முல்லைத்தீவு, ஏப். 25
கரைதுறைப்பற்று, நீராவிப்பிட்டி ஹிச்சிராபுரம் பகுதியில் வசிக்கும் 50 இஸ்லாமிய குடும்பங்களுக்கு எக்டோ நிறுவனத்தால் உலருணவுப் பொதிகள் கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டன.

எக்டோ தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் நீராவிபிட்டி- ஹிச்சிராபுரம் கிராமப் பகுதியில் முஸ்லிம் சமூகத்தினரை ஒன்றிணைத்து இப்தார் நிகழ்வு இடம்பெற்றது.

அதன்போதே நோன்புத் திருநாளை முன்னிட்டு 50 இஸ்லாமிய குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (எ-14,19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிக்கப்பட்ட நிலப்பரப்புக்குள் நெற்செய்கையை மேற்கொள்க!

**மன்னார், ஏப். 25**

**மன்னாரில் சிறுபோகத்துக்கு என வழங்கப்பட்ட நிலப்பரப்பைக் கொண்டு விவசாயிகள் நெற்செய்கையை மேற்கொள்ளவேண்டும். அதனைவிடுத்து மறைமுகமாக செய்கையில் ஈடுபடும் பட்சத்தில் நீர் வழங்கலில் சிரமம் ஏற்படுவதுடன் உயர்மட்டங்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது என்று மன்னார், வவுனியா நீர்பாசனப் பணிப்பாளர் எந்திரி எம்.ஐ.எம்.இஸட் இப்றாகிம் தெரிவித்தார்.**

2023 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கை தொடர்பாக மன்னார் மாவட்டச் செயலர் தலைமையில் நடைபெற்ற விவசாயக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நடப்பு வருடமாகிய 2023ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தில் பிரதானமாக விளங்கும் கட்டுக்கரைக்குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. கட்டுக்கரைக்குளத்தின் நீர் மட்டத்தை கவனத்தில் வைத்துக்கொண்டே வருடந்தோறும் மன்னாரில் சிறுபோகம் செய்வது வழமையாகும். இந்த வருடம் கட்டுக்கரைக்குளத்தின் நீர் மட்டம் 11.6 அடி நீர் கொள்ளளவு கொண்டதாக இருக்கின்றபோதும் தற்பொழுது 11.4 அடி நீர் காணப்படுவதால் 10 ஏக்கர் கொண்டவர்களுக்கு ஒரு ஏக்கர் படி நெற்செய்கை பண்ணக்கூடிய நிலை காணப்படுவது மகிழ்ச்சிக்குரியது.

இந்த நெற்செய்கையில் ஈவைவிட்டு பொதுத் தேவைக்கென கடந்த காலத்தில் ஏக்கர் பிரமாணங்கள் மறைமுகமாகவும் வழங்கப்பட்டன. இதனால் நீரின் அளவையும் செய்கை பண்ணப்பட்ட நெற்செய்கையையும் உயர் மட்டத்தில் கணக்கெடுக்கப்பட்டு எங்களிடம் கேள்விகளும் எழுப்பப்பட்டன. ஆனால், இந்தமுறை மறைமுகமாக பொதுத் தேவைகளுக்கென மேற்கொள்ளப்பட்ட ஏக்கர் பிரமாணங்கள் வெளிக்கொணரப்பட்டு 296 ஏக்கரில் செய்கைப்பண்ணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இன்னும் சில ஏக்கரில் மறைமுகமாக செய்கை பண்ணுவதற்கான ஏற்பாடுகளும் இருப்பதாக எமக்குத் தெரியவந்துள்ளது. இதனால் கூடிய நீரில் குறைந்த விவசாய நெற்செய்கை பண்ணப்படுகின்றது என்ற குற்றச்சாட்டும் உயர் மட்டத்திலிருந்து எமக்குக் கிடைக்கப் பெறுகின்றது. மன்னாரில் எவ்வளவு விவசாய நிலம் இருக்கின்றது, சிறுபோகம், பெரும்போகம் எவ்வளவு செய்யப்படுகின்றது என்பது வெளிச்சமாக இருக்கின்றது. ஆகவே விவசாயிகள் வெளிப்படை இல்லாமல் பிழையான வழிகளில் நெற்செய்கை மேற்கொள்வதைத் தவிர்த்து தங்களுக்கென ஒதுக்கப்பட்ட பரப்புகளில் நெற்செய்கையை மேற்கொள்ள வேண்டும்-என்றார். (எ-14,60,2013)




இணுவில் கந்தன் அறக்கட்டளையும், நந்தாவில் நீங்காமூலை காளியாச்சி அறக்கட்டளையும், ஒருங்கிணைந்து, இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் மனிதநேயப் பணிகள் கடந்த 15ஆம் திகதி சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டன.
இதன்போது பொருண்மியம் நலிவுற்ற மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், கோண்டாவில் ஆதார மருத்துவமனைக்கு அத்தியாவசிய மருந்துப் பொருள்கள், பொருளாதாரத்தில் பின்தங்கிய, தந்தையை இழந்த பல்கலைக்கழக மாணவிகளுக்கு மடிக்கணினிகள் என்பன வழங்கப்பட்டன. (ய-27)



தென்மராட்சி பிரதேசசெயலகத்தில் சித்திரைப் புத்தாண்டு கைவிசேட நிகழ்வு கடந்த 17ஆம் திகதி இடம்பெற்றது (ய-9)



யாழ்.கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி மேற்படி வித்தியாசாலை மைதானத்தில் அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது. (ய-66)



அனலைதீவு அருணோதயா சனசமூகநிலையம் மற்றும் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் 50 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு பாரம்பரிய விளையாட்டு நிகழ்வு ஏப்ரல் 14 ,15 ஆகிய திகதிகளில் இடம்பெற்றது. (ய-9)





புதுவருட பிறப்பு தினத்தை முன்னிட்டு இலங்கைக் கடற்படையினரின் ஏற்பாட்டில் பாரம்பரிய மற்றும் மெய்வன்மை விளையாட்டுப் போட்டிகள் புங்குடுதீவு வல்லன் ஈஸ்ரன் மைதானத்தில் அண்மையில் மிகச்சிறப்பாக இடம்பெற்றது. (ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
08.12.1948

## சுப்ரமணியம் மகாதேவா

மறைவு
22.04.2023



யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், முல்லைத்தீவு, சிவபுரம், பாண்டியன்குளம், அனலைதீவு, ஜேர்மனி Neuss, நோர்வே Oslo, இந்தியா, சென்னை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சுப்ரமணியம் மகாதேவா கடந்த (22.04.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - வேலாசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், அனலைதீவைச் சேர்ந்த பரமலிங்கம் (இந்தியா) காலஞ்சென்ற பேரின்பநாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும், கேதீஸ்வரியின் ( சென்னை - இந்தியா) அன்புக் கணவரும், கோமா (கவிதா - நோர்வே), கிருபாலினி (கனடா), சிந்துஜா (நோர்வே), துஷ்யந்தன் (நோர்வே), ஜெயந்தன் (சென்னை - இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கண்ணன், தினேஷ், முரளி, வெரோனிகா, சஹானா ஆகியோரின் அன்பு மாமனாரும், பரமேஸ்வரி (கிளிநொச்சி), மகேஸ்வரி (பாண்டியன்குளம்), தையல்நாயகி (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் ( ஜி.எஸ் - பாண்டியன்குளம்), கமலேஸ்வரி (பாண்டியன்குளம்), பத்மாதேவி (இந்தியா), விஜயலலிதா (சிவபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான துரைசாமி, ரத்தினம், ரத்னராஜா மற்றும் புஸ்பகாந்தா, பொன்னம்பலம், ராயன் ஆகியோரின் மைத்துனரும், சந்தீப், சபீதா, சபீசன், தியான், டிஜா சாஸ்தி, டேவ் சாஸ்தா, டேயோன், ஜெய்சிவின் ஆகியோரின் அன்புப் பேரனும், வேதநாயகம், கேதிஸ்வரநாதன், சிவநாயகம், சிவகரன், சிவலிங்கம், அரிகரன், சிவகௌரி, கலைவாணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.04.2023) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கிளிநொச்சி திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 24/2, கணேசபுரம்,**
**கிளிநொச்சி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS/50177)AH-1

**மனோ - 077 387 2992, ஜெயந்தன் - 076 062 6205,**
**ரமேஷ் - 077 471 0724, ராயன்-077 9483790**

# மரண அறிவித்தல்

## திரு.நாகநாதி பாலசிங்கம்

## திருமதி பாலசிங்கம் கண்மணிப்பிள்ளை





நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் பாண்டியன்குளம் செல்வபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற அப்பாக்குட்டி நாகநாதி தம்பதியரின் புதல்வன் நாகநாதி பாலசிங்கம் என்பவரும் மற்றும் திருமதி பாலசிங்கம் கண்மணிப்பிள்ளை என்பவரும் கடந்த 22.04.2023 இல் அகால மரணமானார்கள்.

ஜீவா (காலஞ்சென்ற), ராஜி (காலஞ்சென்ற) ஆகியோரின் அன்புப் பெற்றோரும், பரணியின் (பிரதேச சபை - பாண்டியன்குளம்) மாமனாரும் மாமியாரும், கேதுசன், கோபிநாத், வினோயா, அட்சகி ஆகியோரின் அன்பு பேரன்மாரும் ஆவார்.

திரு. நாகநாதி பாலசிங்கம் (அன்னார்), சிந்தாமணி (கனடா), புவனேஸ்வரி (பாண்டியன்குளம்), கடாட்சம் (லண்டன்), சிரோன்மணி (பாண்டியன்குளம்), வைத்திலிங்கம் (கனடா), சபாரட்ணம் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர் - யாழ்ப்பாணம்), லோகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கணபதிப்பிள்ளை (கனடா), பேரம்பலம் (பாண்டியன்குளம்), சகுந்தலாதேவி (லண்டன்), சிவதாஸ் (பாண்டி யன்குளம்), குணலட்சுமி (கனடா), ஜெயந்தி (ஓய்வு நிலை முகாமைத்துவ உதவியாளர் கூட்டுறவு திணைக்களம் - யாழ்ப்பாணம்), நடராசலிங்கம் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும்.

திருமதி பாலசிங்கம் கண்மணிப்பிள்ளை (அன்னார்) காலஞ்சென்ற நாகம்மா மற்றும் பூரணம் (மன்னார்), காலஞ்சென்றவர்களான கந்தையா, நாகசுந்தரி, சிந்தாமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சேதுபதி, கனகர், கமலம், கார்த்திகேசு, கோபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னார்களின் இறுதிக்கிரியைகள் 36/1, பிரம்படி வீதி, கொக்குவில், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இல்லத்தில் நாளை (26.04.2023) புதன்கிழமை நடைபெற்று, புகழுடல்கள் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 36/1, பிரம்படி வீதி, கொக்குவில்,**
**யாழ்ப்பாணம்.**

(CS 24599)A-1

**021 222 7759**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்றால் வீடுகள் சேதம்; குடும்பங்கள் மண்டபத்தில்

புதுக்குடியிருப்பு மூங்கிலாறு தெற்குப் பகுதியில் அண்மையில் வீசிய கடும் காற்று, மழை காரணமாக தற்காலிகக் கொட்டில்களில் வசித்து வந்த இரண்டு குடும்பங்கள் தம் இருப்பிடத்தை முற்றாக இழந்த நிலையில், அங்குள்ள பொதுநோக்கு மண்டபத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு குடும்பம் கடந்த நான்கு ஆண்டுகளாக வீட்டுத்திட்டம் கிடைக்காத நிலையில் தற்காலிக வீட்டில் வசித்து வந்தனர். மற்றைய குடும்பம், தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்ட போதும் வீட்டுக்கான அத்திபாரம் இடப்பட்ட நிலையில் நிதி நிறுத்தப்பட்டுள்ளது. நிதி கிடைக்காமையால் அவர்களும் கடந்த நான்கு ஆண்டுகளாக தற்காலிக வீட்டிலேயே வசித்து வருகின்றனர்.

அண்மையில் மழையுடன் வீசிய கடும் காற்றாலும் மழையாலும் இந்த இரண்டு குடும்பங்களினதும் தற்காலிக இருப்பிடங்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், அந்தக் குடும்பங்கள் பொதுநோக்கு மண்டபத்தில் தற்காலிகமாகக் குடியமர்ந்துள்ளன. அத்துடன் அவர்களுக்குத் தேவையான உணவுகளையும் கிராமஅபிவிருத்திச் சங்கம் வழங்கி வருகின்றது. (ம-14-19)



ஜேர்மனி முட்பன் கோறன்பிளோ இலவச சட்ட ஆலோசனை நிறுவனத்தின் யாழ்ப்பாணத்துக்கான கிளை, நிறுவனத்தின் சட்டத்தரணி கோறன்பிளோவால் நேற்றுத் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது. (ம-14-20)



## குருநகர் கடற்பகுதியில் நேற்றுத் துப்புரவுப்பணி

பூமி தினத்தை முன்னிட்டு கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரசபையால் குருநகர் கடற்கரைப் பகுதிகளில் துப்புரவுப் பணிகள் நேற்றுத் திங்கட்கிழமை காலை முன்னெடுக்கப்பட்டன. கடல்சார் சுற்றுச்சூழல் அதிகாரசபை, யாழ்ப்பாண மாவட்டச்செயலகம், பொலிஸார், இராணுவம் ஆகிய தரப்புக்கள் இணைந்து இந்தத் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டன. (ம-14)


# UNIVERSITY OF JAFFNA

## A. Research on the Impact of increasing salinity in groundwater on Human Health, in Northern Province, Sri Lanka.

**Temporary appointment**

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts for research on the impact of increasing salinity in groundwater on Human Health in Northern Province, Sri Lanka in partnership with the University of Manchester, UK.

1. **Research Assistant (01 post)**
   **Requirements:**
   - MBBS or other equal qualification from UGC approved University / Higher Education Institution.
   - Minimum 3 years of experience in community-based health-related research.

   **Remuneration:**
   A monthly salary of LKR 60,000.00 will be paid.
2. **Coordinator(01 post)**
   **Requirements:**
   - A Bachelor degree or other equal qualification from UGC approved University / Higher Education Institution.
   - Preference will be given to those who have experience in project coordination especially in community-based health related research.

   **Remuneration:** A monthly salary of LKR 45,000.00 will be paid.
3. **Data Collectors(02 posts)**
   **Requirements:**
   - A Bachelor degree or other equal qualification from UGC approved University / Higher Education Institution.
   - Minimum one year of experience in community-based health related research.
   - Ability to handle e-based data collection.

   **Remuneration:** A monthly salary of LKR 40,000.00 will be paid.
4. **Data Collecting Assistants(02 posts)**
   **Requirements:**
   - Should have passed the G.C. E. A/L examination with three passes.
   - Preference will be given to those who have experience in health research related and e-based data collection.

**Remuneration:** A monthly salary of LKR 30,000.00 will be paid.

## B. Project for community healthcare worker- facilitated fertility care in Northern Province, Sri Lanka.

**Temporary appointment**

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts for the project on Community healthcare worker-facilitated fertility care in Northern Province, Sri Lanka, funded by International Medical Health Organization (IMHO)

01. **Project Coordinator (01 post)**
   **Requirements:**
   - A Bachelor degree from UGC approved University or Higher Education Institution.
   - Preference will be given to those who have experience in project coordination especially in community-based health related projects.

   **Remuneration:** A monthly salary of LKR 40,000.00 will be paid.
02. **Community Healthcare Workers ( 05 posts)**
   **Requirements:**
   - Relevant educational qualification for the post.

or

Minimum 01-year working experience in community-based health-related projects.
**Remuneration:** A monthly salary of LKR 30,000.00 will be paid.

**General note to all the above posts**

- All selected candidates will be appointed on full-time basis for **six months.**
- Candidates should possess excellent language skills in Tamil.
- Should be a citizen of Sri Lanka.
- Ability to work in the field of any part of Northern Province, Sri Lanka.
- Age should be not less than 18 years and not more than 35 years.
- All selected candidates will become a contributor to the Employee Provident Fund (EPF) and the Employee Trust Fund (ETF), the employee should contribute 8% of the monthly salary to the EPF and the employer will contribute 12% & 3% of the monthly salary to EPF & ETF respectively.

The Application forms downloaded from the University website should accompany with the paid Bank slip for the deposit of a sum of Rs.100/- credited to the people's Bank Account No (Ref No): 970000090000387 in favor of Bursar, University of Jaffna.

Applicants are requested to send their applications with copies of the educational certificates and any other relevant certificates in proof of qualifications and experience via registered post to reach **Deputy Registrar/ Faculty of Medicine, University of Jaffna, Adiyapatham Road, Kokuvil, Jaffna.** Applicants are requested to send the scanned copies of all the documents to the email address: fomvacancy@univ.jfn.ac.lk on or before Monday , 08th of May 2023.

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Boards should channel their applications through the Heads of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

The candidates who apply for more than one post should submit a separate application for each of the posts. Illegible & incomplete applications and applications received after the closing date will be rejected without intimation. The candidates who apply for more than one post should submit separate applications along with separate Bank slips. The post applied for should be marked on the top left-hand corner of the envelope.

For further details, please refer to the University of Jaffna website - www.jfn.ac.lk

**Registrar**
**24.04.2023**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர்பகிர்கின்றோம்




எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி டெ.நாகேந்திரன்
அவர்களின் அன்பு மாமனார்
**முருகன் கந்தன்**
நேற்று முன்தினம் (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை
இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் வட்டம் : யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**

(CS/50178) AH-1

## கண்ணீர் அஞ்சலி

### கந்தசாமி ஐயர் உலகுருநாதன் ஐயர்



பிறப்பு 28.11.1951 இறப்பு 23.04.2023

ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய பிரதம பூசகரும், ஆலய நிர்வாகத்தின் செயலாளரும், ஆலய அறக்கட்டளை நிதியத்தின் முதல் தலைவரும், ஆலய சூழலில் வியாபார ஒழுங்குகளை முன்னின்று செயற்படுத்தியவரும், ஆலய நிர்வாகத்தின் திருப்பணி வேலைகளுக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்கி ஆலோசனைகளை வழங்கியவரும், மெத்தை வீட்டு கந்தசாமி ஐயர் மடத்தின் நிர்வாகியும் ஆகிய கந்தாமி ஐயர் உலகுருநாதன் ஐயர் அவர்களின் தேகநீக்கத்தால் துயருற்றுள்ள அவரது குடும்பத்தினர், ஐயாவின் அன்பர்கள், துன்பத்திலும் பங்கெடுத்துக் கொள்வதுடன் ஐயாவின் ஆத்மா எம் சந்நிதி வேலவனின் பாதக் கமலங்களைச் சென்றடைந்து சாந்தியடைய எம் பெருமானை வேண்டிப் பிரார்த்தனை செய்து கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

**ஆலய உரிமையாளர்களும்,**
**ஆலய நிர்வாகமும்.**

AH-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 05 . 1940

மறைவு 22 . 04 . 2023



### திருமதி புனிதவதி இராஜதுரை

சரவணை மேற்கு வேலணையை பிறப்பிடமாகவும் இந்தியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராஜதுரை புனிதவதி கடந்த (22.04.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு சிவக்கொழுந்து தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான ரூபவதியம்மா, தில்லையம்மா, பாலசுப்பிரமணியம், பொன்னுத்துரை ஆகியோரின் பெறாமகளும், இராஜதுரையின் அன்பு மனைவியும், கமலாதேவி, தவமணி, சரசு, முருகேசபிள்ளை (அமரர்), மகேசு, ஜெகதீஸ்வரி, பரமேஸ்வரன் (அமரர்), குமரேஸ்வரன், ஜெகசக்தி, வள்ளியம்மை (அமரர்), நாகேந்திரம் (அமரர்), சின்னப்பா, கோபாலகிருஷ்ணன் (அமரர்), சின்ராசா, பிள்ளையார், செல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், நகுலேஸ்வரி, தயாநிதி, குலநாயகம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், மனோகரன் (சுவிஸ்), நீலாம்பரன் (சுவிஸ்), இளங்கோபன் (சுவிஸ்), பகீரதன் (லண்டன்), வனஜா (இந்தியா), தர்மவாசன் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகேஸ்வரி, வதனி, இந்துமதி, வினோதினி, சபேசன், தாமரைச்செல்வி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அபித், அபிஷேக், அபிஷன், ஆருஷன், அபிதன், அஜிதன், இராகிதன், விஷால், அபிஷா, வேளருவி, ஆதவன், ஆதவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.


அன்னாரின் பூதவுடல் கடந்த (22.04.2023) சனிக்கிழமை தொடக்கம் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. நாளை (26.04.2023) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் நாரந்தனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
**குடும்பத்தினர்**
**வாசன்(மகன்):-075 351 3775.**

## மரண அறிவித்தல்

பிறப்பு 04 . 08 . 1945

இறப்பு 23 . 04 . 2023



### வெள்ளையப்பு தர்மலிங்கம்

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், ஆசிரிய மணி செல்லையா வீதி, அளவெட்டி தெற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட வெள்ளையப்பு தர்மலிங்கம் நேற்றுமுன்தினம் (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வெள்ளையப்பு - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசமலரின் பாசமிகு கணவரும், தவகீசன் (பிரான்ஸ்), அபிலஷா (மேலதிக மாவட்ட பதிவாளர் - பிரதேச செயலகம், காரைநகர்), மீருஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கீர்த்தனா, முகுந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - மாவட்ட செயலகம், கிளிநொச்சி), கௌதம் ( ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அபிஷாவின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான சோதிமலர், அசுவதி மற்றும் சிவபாக்கியம், தவராசா, சிவலிங்கம், சரஸ்வதி, நாகேஸ்வரி, சிவகுமாரி, விக்கினேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான பூமலர், சிதம்பரநாதன், பாக்கியநாதன், புனிதமலர் மற்றும் திருஞானசம்பந்தநாதன் (ஜேர்மனி), புஸ்பமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**076 227 5256, 077 672 6142**

CS/5017 JAH-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 1946 07 10

மறைவு 2023 04 24



### திருமதி பத்மநாதன் உருத்திராதேவி

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி பத்மநாதன் உருத்திராதேவி** நேற்று (24.04.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற பத்மநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பழனித்துரை - விசாலாட்சியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - விசாலாட்சியின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான நித்தியரெத்தினம், மங்கையற்கரசி மற்றும் பாலச்சந்திரன், கமலாதேவி காலஞ்சென்ற சத்தியபாலன் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தில்லைநாதன், இராசரெத்தினம், தேவி, இந்திரா மற்றும் பாக்கியநாதன், சோமசுந்தரம் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை மற்றும் தேவகி, பூங்கோதை காலஞ்சென்ற விமலநாதன் மற்றும் கன்னிகாபரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.04.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மண்டைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொலைபேசி
**076 6998 191**

தகவல்:-
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கண்காட்சி

யாழ்ப்பாணம் ஏப் 25

இணுவில் பொதுநூலக சிறுவர் திறன் விருத்தி மையத்தின் சிறுவர் கண்காட்சி எதிர்வரும் 27ஆம் திகதி மற்றும் 28ஆம் திகதி ஆகிய இரு தினங்கள் இடம்பெறவுள்ளன.

இணுவில் பொதுநூலக சிறுவர் திறன் விருத்தி மையத்தின் தலைவர் சி.புரந்தரா தலைமையில் இடம்பெறவுள்ள கண்காட்சியில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்வி அலுவலக முன்பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கிருபானந்தன் கலந்துகொள்ளவுள்ளார். (ம-14)

# வடமாகாணத்தில் கூடுதல் வெப்பம்

பொதுமக்களுக்கு எச்சரிக்கை

வடக்கு மாகாணத்தில் இன்று கூடுதல் வெப்பம் நிலவும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் 15 மாவட்டங்களில் இன்று வெப்பநிலை அதிகமாக இருக்கும் என்று தெரிவித்துள்ளது. இதில் வடமாகாணத்தின் 5 மாவட்டங்களும் உள்ளடங்குகின்றன. இந்தப் பகுதிகளில் மனித உடல் வெப்பநிலை தீவிர எச்சரிக்கை நிலைவரை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)


# பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் மேற் குபிரதேச சபை, சுழிபுரம்
## சபைநிதி - 2023

1. வலிகாமம் மேற்கு பிரதேசசபை சபை நிதியினைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
2. தேசியபோட்டிகோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட03/2020 (i) ஆம் இலக்க 11.01.2021 ஆந் திகதிய 04/2016(ii) ஆம் இலக்க 08.05.2019, ஆந் திகதிய 04/2016 (iii) ஆம் இலக்க 18.02.2021 ஆந் திகதிய மற்றும் 04/2016(iv) இலக்க 09.02.2023 ஆம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தைச் சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரியதரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
3. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம். அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
4. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு,வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்த மானதரத்தில், நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள். கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு **அட்டவணை** (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சுழிபுரத்தில் அமைந்துள்ள வலிகாமம் மேற்குபிரதேச சபை (தொலைபேசி : 0212250144,தொலைநகல் : 0212250144, மின்னஞ்சல் : **valiwestps@gmail.com**) இல் இருந்து மேலதிகதகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப 14.00 மணிவரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் வலிகாமம் மேற்குபிரதேச சபை,சுழிபுரம். என்னும் இடத்தில் 25.04.2023ம் திகதியிலிருந்து 09.05.2023 ம் திகதி வரை சனி ஞாயிறு தவிர்ந்த வேலைநாட்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப 14.00 வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3000 (வரிநீங்கலாக) இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர்,வலிகாமம் மேற்குபிரதேச சபை,சுழிபுரம்,என்னும் முகவரிக்கு 10.05.2023 ம் திகதி பி.ப 01.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அலலது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது ,கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப் பெற்றகேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

| தொ இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்விசமர்ப்பிக்கப் படும் இறுதித்திகதியிலிருந்து கேள்விசெல்லுபடியாகும் காலம். | | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | செல்லுபடியாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | **சங்கானை பகுதிவீதிகள் புனரமைப்பு**(சங்கானை வைத்தியசாலை தெற்குவீதி, தேவாலய வீதி 3ஆம் கிளை ஒழுங்கை, அறிவகம் 2ஆம் வீதி) NP/14/41(17)/02/CF/01/Cha/2023 | 2.163 Mn | 60 நாட்கள் | C9,C8 & C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 12.07.2023 | 22,000.00 | 10.08.2023 |
| 02 | வட்டுக்கோட்டைபகுதிவீதிகள் புனரமைப்பு–குழுI(நொத்தாரிசு வீதி, ஓடக்கரைவீதி,(சங்கரத்தைவீதி (தொடக்கம் ஓடக்கரை பிள்ளையார் கோவில்) NP/14/41(17)/02/CF/02/ Vaddu-I/2023 | 2.015 Mn | 60 நாட்கள் | C9,C8 & C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 12.07.2023 | 21,000.00 | 10.08.2023 |
| 03 | **வட்டுக்கோட்டைபகுதிவீதிகள் புனரமைப்பு– குழு II** (தங்கோடைவீதி, சிவன் கோவில் வீதி முதலாம் ஒழுங்கை டச்சு வீதி முதலாம் ஒழுங்கையின் கிளை ஒழுங்கை (கலைநகர் முதலாம் ஒழுங்கை) (,இவான் வீதி) (சீக்காய் வீதி) டச்சுவீதிநாலாம் ஒழுங்கை NP/14/41(17)/02/CF/03/ Vaddu-II//2023 | 4.861 Mn | 60 நாட்கள் | C9,C8 & C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 12.07.2023 | 49. 000.00 | 10.08.2023 |
| 04 | **சுழிபுரம் பகுதிவீதிகள் புனரமைப்பு– குழு I** (கேணிக்கடவை வீதி மெய்கண்டான் பாடசாலைவீதி 2 ஆம் ஒழுங்கை, சங்கக்கடை 2 ஆம் ஒழுங்கை, கண்டாமை வீதி 1ஆம் ஒழுங்கை) NP/14/41(17)/02/CF/04/ Chu-I/2023 | 4.228 Mn | 60 நாட்கள் | C9,C8 & C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 12.07.2023 | 43. 000.00 | 10.08.2023 |
| 05 | **சுழிபுரம் பகுதிவீதிகள் புனரமைப்பு– குழு II** (கம்பானை அம்மன் வீதி 3 ஆம் ஒழுங்கை. இறாத்தலடி கிளை ஒழுங்கை, நெல்லியான் வீதி கிளை ஒழுங்கை) NP/14/41(17)/02/CF/05/Chu-II 2023 | 3.152 Mn | 60 நாட்கள் | C9,C8 & C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 12.07.2023 | 32. 000.00 | 10.08.2023 |
| 06 | **சுழிபுரம் பகுதிவீதிகள் புனரமைப்பு– குழு III** காரைநகர் வீதி கம்மாலைவீதி இணைப்பு வீதிகாளி கோவில் முன் வீதி இரண்டாம் ஒழுங்கை (முன் கோடை) காக்கையன் தோட்டம் வீதி NP/14/41(17)/02/CF/06 Chu-III/2023 | 3.148Mn | 60 நாட்கள் | C9,C8 & C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 12.07.2023 | 32,000.00 | 10.08.2023 |
| 07 | **அராலிபகுதிவீதிகள் புனரமைப்பு** (வீமன்காமம் 2 ஆம் வீதி பெரிய தம்பிரான் கிளைவீதி உடையார் வீதி வண்ணபுரம் வீதி செட்டி குறிச்சி பிள்ளையார் கோவில் வீதி இடதுபக்க முதலாம் வீதி புளியடி ஒழுங்கை குலனைஒழுங்கை, NP/14/41(17)/02/CF/07/Araly/2023 | 6.645 Mn | 90 நாட்கள் | C8,C7 & C6 வீதிப் புனரமைப்பு | 77 நாட்கள் | 26.07.2023 | 67,000.00 | 23.08.2023 |
| 08 | **மூளாய் மீன் சந்தை அமைத்தல்** | 1.895Mn | 60 நாட்கள் | C9,C8 & C7 கட்டிடம் அமைத்தல் | 63 நாட்கள் | 12.07.2023 | 19,000.00 | 10.08.2023 |

கேள்விதிறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்குபிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் 02.05.2023 அன்று பி.ப.14.00மணிக்கு நடைபெறும்.இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்தசெலவில் கலந்து கொள்ளமுடியும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம்.**


**25.04.2023**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடை வளர்ப்பாளர்கள் யாழில் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ்ப்பாணம் - மல்லாகம் பகுதியில் கால்நடை வளர்ப்பாளர்கள் நேற்றையதினம் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.



போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்ததாவது:

வலிகாமம் வடக்குப் பகுதிகளில் பல குடும்பங்கள் மாடு, ஆடு வளர்ப்பைத் தமது வாழ்வாதாரமாக மேற்கொண்டு வருகின்றன. இவ்வாறு வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்படும் மாடுகளும் ஆடுகளும் தொடர்ந்து திருடப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் பொலிஸாரிடம் ஏகப்பட்ட தடவைகள் முறைப்பாடுகள் வழங்கப்பட்டும் இந்தக் கால்நடைத் திருட்டுகள் கட்டுப்படுத்தப்பட்டபாடில்லை. மாறாக எமது கால்நடைகள் சட்டவிரோதமாக இறைச்சியாக்கப்பட்ட பின்னர் அவற்றின் தோலும், தலைப்பகுதியும், இதர எச்சங்களும் மட்டுமே மீட்கப்படுகின்றன.

எனவே அதிகாரிகள் விரைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு எமது கால்நடைகளைப் பாதுகாத்துத் தரவேண்டும் - என்றனர்.

போராட்ட இடத்தில் பசு ஒன்றையும் கட்டி போராட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தின் பின்னர், காங்கேசன்துறை மூத்த பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்துக்குச் சென்று மனுவொன்றையும் அவர்கள் கையளித்தனர். (ம-20)

# கட்சிக்குத் துரோகம்: பதவிகள் பறிபோகும்

## மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 25

கட்சியை விட்டு வெளியேறி, கட்சிக்கும் நாட்டுக்கும் துரோகம் செய்பவர்களின் பதவிகள் பறிபோகும். அதுதான் பீரிஸுக்கும் நடந்தது என்று பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பதவிகள் நிரந்தரம் இல்லை. அது முதலில் தேடிவரும், பின்னர் பறிபோகும் அல்லது பதவியை இராஜினாமா செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் வரும். நாட்டின் நன்மை கருதி பிரதமர் பதவியைக்கூட நான் இராஜினாமா செய்திருந்தேன். தற்போது பொதுஜன பெரமுனவின் பொதுச்சபையின் தீர்மானத்துக்கமைய பெரமுனவின் தவிசாளராக இருந்த பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நீக்கப்பட்டு புதிய தவிசாளராக சிரேஷ்ட பேராசிரியர் உதுராவல தம்மரதன தேரர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுஜன பெரமுனவின் பொதுச்சபையின் இந்த நடவடிக்கையை எவரும் சவாலுக்குட்படுத்த முடியாது. கட்சியின் கோட்பாட்டை மீறிச் செயற்பட்ட காரணத்தால்தான் பீரிஸின் பதவி பறிபோனது. இதுதான் உண்மை - என்றார். (ம-22)

## சந்நிதிக்கு அருகில்

# தேவாலயம் அமைக்க அனுமதி வழங்கவில்லை

## முன்னாள் தவிசாளர் நிரோஷ் மறுப்பு

யாழ்ப்பாணம், ஏப். 25

சந்நிதி ஆலயத்துக்கு அருகில் தேவாலயம் அமைப்பதற்கு நான் அனுமதி வழங்கியதாக வெளியாகிய செய்திகளில் உண்மை கிடையாது என்று வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிய ஊடக அறிக்கையில் உள்ளதாவது,

சந்நிதி ஆலயத்துக்கு அருகில் வீடு அமைப்பதற்கு பிரதேசசபையில் விண்ணப்பித்து ஒருவரால் அனுமதி பெறப்பட்டுள்ளது. அனுமதி பெற்றவர் கட்டடம் ஒன்றை அமைக்க முயற்சித்த போது, சந்நிதி ஆலய நலன்விரும்பிகள் செல்வச்சந்நிதி ஆலய சூழலில் தேவாலயம் அமைக்கப்படுவதாக என்னிடம் முறையிட்டனர்.

முறைப்பாடுகளின் பிரகாரம் எமது உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்கச் சென்றபோது, கட்டடம் அமைப்பவர் முறைப்படி வீடு அமைப்பதற்கான அனுமதி பெற்றிருந்தமை தெரியவந்தது. ஏற்கனவே எம்மால் வழங்கப்பட்ட அனுமதியை முறைப்பாட்டின் பிரகாரம் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தியபோது, விண்ணப்பதாரி காணியை முறைப்படி பெற்றுள்ளமைக்கான ஆவணங்கள் எமக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இவற்றுக்கும் மேலதிகமாக, வீடு என்ற போர்வையில் தேவாலயம் அமைகின்றதா என ஆராயு முகமாக, விண்ணப்பதாரியை நான் நேரில் அழைத்து சபையில் விளக்கம் கேட்டபோது, தான் ஒரு இந்து மதத்தைச் சேர்ந்த முன்னாள் போராளி எனவும் தான் வாழ்வதற்காக பலரிடம் உதவிபெற்று தனக்கான வதிவிடம் ஒன்றை அமைப்பதாகவும் அவர் என்னிடம் உறுதியளித்திருந்தார்.

தேவாலயம் அமைக்கப்படுவதாக சந்தேகித்து முறைப்பாடுகள் கிடைத்ததால், விண்ணப்பதாரி சபையின் அனுமதிக்கு முரணாக ஏதாவது கட்டட வேலைகளைச் செய்கின்றாரா என்பது பற்றி பிரதேசசபையின் உத்தியோகத்தர்கள் பல தடவைகள் எனது அறிவுறுத்தலின் பிரகாரம் சோதனையிட்டுள்ளனர். நான் பதவியில் இருக்கும் வரையில் அவ்வாறு இடம்பெறவில்லை.

இந்த நிலையில் எனது பதவி முடிவுற்றதன் பின்னர் சபையின் செயலாளரிடம் பொறுப்பைக் கையளித்துள்ளேன். விண்ணப்பதாரி எதிர்காலத்தில் கட்டடத்தை தேவாலயமாகப் பயன்படுத்துவார் என்ற சந்தேகங்களின் அல்லது எதிர்வு கூறலின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க முடியாது.

இந்த நிலையில் த்விசாளரிடம் முறையிட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் தவிசாளரினாலேயே அனுமதி வழங்கப்பட்டது என்றும் கூறப்படுவது அரசியல் நோக்கம் கொண்ட [illegible] - என்றுள்ளது. (ம-14)

எக்ஸ்பிரஸ் பேர்ள் விவகாரம்;

# 8,000 கோடி ரூபா லஞ்சம்: வாங்கிய இலங்கையர் யார்?

கொழும்பு, ஏப். 25

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்துக்கான இழப்பீட்டைப் பெறுவதற்காக தொடுக்கப்படும் வழக்கை தடுப்பதற்கு 8 ஆயிரம் கோடி ரூபா பெற்றதாகக் கூறப்படும் இலங்கையர் யார் என்பதை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும் - இவ்வாறு சுதந்திர மக்கள் சபையின் உறுப்பினர் டலஸ் அழகப்பெரும வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் கடந்த 2021ஆம் ஆண்டில் எரிந்து விபத்துக்குள்ளானது. இதனால் கடல் வளங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு இழப்பீடு பெற்றுக்கொள்வதற்கு சர்வதேச சட்டத்தின் பிரகாரம் வழக்குத் தாக்கல் செய்வதற்கு இன்னும் 27 நாள்களே உள்ளன.

கப்பல் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து 6.4 பில்லியன் டொலர் இழப்பீடு பெற்றுக்கொள்ள முடியும் என துறைசார் நிபுணர்கள் பரிந்துரைத்துள்ளார்கள். சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து தவணை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடனைக் காட்டிலும் இந்தக் கப்பல் நிறுவனத்திடமிருந்து இழப்பீடாக 6.4 பில்லியன் டொலரை பெற்றுக்கொள்ள இந்த அரசாங்கம் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை.

நட்டஈடு பெறுவதற்கான சட்டநடவடிக்கையை தடுப்ப தற்கு இலங்கையர் ஒருவருக்கு 250 மில்லியன் டொலர் (இலங்கையின் நாணய அலகின் பிரகாரம் 8 ஆயிரம் கோடி ரூபா) லஞ்சம் வழங்கப்பட்டுள்ளது என தெரியவருகின்றது. நாட்டைச் சீரழித்து இலாபம் பெறும் இந்தச் செயல் தேசத்துரோகமாகும். அந்த இலங்கையர் யார் என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் - என்றார். (ச-இ)


# பெயர் மாற்றம்

சிவநகர், உருத்திரபுரம், கிளிநொச்சியில் வசிக்கும் ஹென்றி மரியநாதன் - ஜோசெப்சகாயம் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை ஹென்றி மரியநாதன் - ஜோசெப்சகா மரியொ என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் "ஹென்றிமரியநாதன் ஜோசெப்சகா மரியொ" என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோஷலிச குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகிறேன்.

ஹென்றிமரியநாதன் ஜோசெப்சகா மரியொ.

(CS 22371) A-1



# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 27.03.1932 மறைவு 24.04.2023

எமது கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் **கலாநிதி பா.தனபாலன்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சிவபாக்கியம் பாலசுப்பிரமணியம்**

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


**கல்லூரிச் சமூகம்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

(CS 24586) (N - 1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



மலர்வு 14 . 01 . 1932

உதிர்வு 22 . 04 . 2023

## செல்லத்துரை நவரத்தினசாமி

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், உடுப்பிட்டி மற்றும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை நவரத்தினசாமி அவர்கள் கடந்த (22.04.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - தங்கரத்தினம் தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற சோமசுந்தரம் - நாகேஸ்வரி தம்பதியரின் மூத்த மருமகனும், பகவதியம்மாவின் அன்புக் கணவரும், இந்துமதி, ஸ்ரீஹரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் அன்புச் சகோதரனும், பாலபாஸ்கரன், தனுஜா ஆகியோரின் பாசம்மிக்க மாமனாரும், காலஞ்சென்ற கிருஷாந்த் மற்றும் அனுஷாந்த், அபிலஷா, நதுஷா, ஷிபானி ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.04.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

100/14, சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்.
077 3379 263

(CS 24601) A-1

# மரண அறிவித்தல்



மண்ணில் 28 . 03 . 1962

விண்ணில் 22 . 04 . 2023

## திருமதி துஸ்யந்தி இராமலிங்கம்

தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி துஸ்யந்தி இராமலிங்கம் அவர்கள் கடந்த (22.04.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தெல்லிப்பழையை சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராசையா அம்பிகாதேவி தம்பதியரின் மகளும், சுன்னாகம் கப்பல் வளவினை சேர்ந்த காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு பத்மாவதி தம்பதியரின் மருமகளும், மார்க்கண்டு இராமலிங்கம் (இளைப்பாறிய கிராம சேவையாளர், சுன்னாகம் கிழக்கு) அவர்களின் பாசமிகு மனைவியும், குமரன் (பொலிஸ் உத்தியோகத்தர், கொழும்பு), ரஜீவன் (கனடா), ஜெனகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், திஷாரதி அவர்களின் மாமியாரும், பர்ஜித், மஹஜித் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காண்டீபன், தமயந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சந்திர குமாரி, காலஞ்சென்ற சுந்தரரூபன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.04.2023) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் சுன்னாகம் இல்லத்தில் இடம்பெற்று, கொத்தியாலடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

கப்பல் வளவு
காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

காணி விற்பனைக்கு

மிருசுவில் ஆசைப்பிள்ளை
ஏற்றம் A9 வீதிக்கு
அருகாமையில் 10 ஏக்கர்
தென்னங்காணி விற்பனைக்குண்டு.
0774384866

விற்பனைக்கு

பத்துச்சில்லு பாரஊர்தி
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 076 765 4481

நாஹா மருத்துவ நிலையம்

மரணப்படுகையில் கிடக்கும் பாரிசவாதம்,
தீவிரகால்விறைப்பு, முள்ளந்தண்டுதேய்வு,அல்சர்,
மாறாத புண்கள், ஆஸ்மா, பிறசர்.
"சிறப்பு மருந்தியல்" T.P.: 077 321 2740
வங்கி முன்லேன் சாத்தாவத்தை வைரவர்
கோயிலடி (ஜெகபதிவீடு) மானிப்பாய்.

# முட்டாள் அரசியல்வாதிகளால் மின்சார நெருக்கடியில் நாடு

## ஜானக ரத்நாயக்க சாடல்

கொழும்பு, ஏப். 25

நாடு எதிர்கொண்டுள்ள மின்சார நெருக்கடிக்கு முட்டாள்தனமான அரசியல்வாதிகளே காரணம். தற்போதைய அரசியல்வாதிகள், எப்படி அரசியல் செய்வது என்ற அடிப்படை அறிவே அற்றவர்களாகக் காணப்படுகிறார்கள் - இவ்வாறு பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மின்கட்டண அதிகரிப்பு மற்றும் பொருளாதார வீழ்ச்சி காரணமாக இலங்கையில் மின்சாரத்துக்கான தேவை வீழ்ச்சியடைந்துள்ளது. இது ஏற்கனவே நட்டத்தில் இயங்கும் இலங்கை மின்சாரசபைக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும்.

கட்டண அதிகரிப்பின் மூலம் தனது நஷ்டத்தை ஈடுசெய்ய முயலும் முயற்சிகள் மக்களையே பாதிக்கும். இந்த நிலைமைகளுக்கு முட்டாள் அரசியல்வாதிகளே காரணம். பகுத்தறிவு அற்ற முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு ஜனாதிபதி தேர்தல் காலத்தில் ஆதரவளித்தமைக்காக வெட்கித் தலைகுனிகிறேன். அமைச்சர் காஞ்சன விஜயசேகர பதவி விலகுமாறு என்னைக் கூறிவருகிறார். நான் ஒருபோதும் பதவிதுறக்கப் போவதில்லை. என்னைப் பதவிநீக்கும் யோசனைக்கு நாடாளுமன்றத்தில் ஆதரவு கிடைக்காது - என்றார். (ச-இ)

# மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்க அங்கத்துவம் தொடர்பானது

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய, ஆலய, மல்லாகம் மாவட்ட நீதிமன்ற வழக்கிலக்கம் நானாவிதம் 39/16 இன் 21.12.2021 ஆந் திகதிய கட்டளைக்கு அமைவாக ஆலய தர்மகர்த்தாசபைத் தேர்தல் நடைபெறவுள்ளது.

மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கத்தில், ஏற்கனவே உள்ள சாதாரண அங்கத்தவர்கள் தங்களது அங்கத்துவத்தினை அங்கத்துவப்பட்டியலில் உள்ளவாறு புதுப்பிப்பதற்கு ஏதுவாக, 26.04.2023 ஆந் திகதி தொடக்கம்- 02.05.2023 ஆந் திகதி வரை (காலை 9.00. முதல் மாலை 4.15 மணி வரை) ஆலய அன்னதான மண்டபத்தில் கடமைக்காக நியமிக்கப்பட்டிருக்கும் உத்தியோகத்தர்களிடம் தேசிய அடையாள அட்டையுடன் நேரடியாக வந்து சாதாரண அங்கத்தவர்கள் தங்களது வருட சந்தாவினை (2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை) செலுத்துவதன் மூலம் தாங்கள் வாக்களிக்கும் உரிமையினை பெற்றுக்கொள்ளலாம் என்பதனை தயவுடன் அறியத்தருகின்றோம்.

தேர்தல் குழு

(CS 39715) A-1

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 28.03.2023 செவ்வாய்க்கிழமை
இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி
அமரர்
திருமதி தங்கராஜசிங்கம் தவரஞ்ஜினி
அவர்களின்

வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் 27ஆம் திகதி (27.04.2023) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் (976, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்) நடைபெறும்.
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை யிலும், அதைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

- குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## துரைசிங்கம் ஜெயமோகன்

(சிங்கம் சவுண்ஸ் உரிமையாளர்)



புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் ஏழாலை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட துரைசிங்கம் ஜெயமோகன் (தாடி மாமா) அவர்கள் (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஏழாலை கிழக்கு ஏழாலை எனும் முகவரியிலுள்ள அவரது இல்லத்தில் 28.04.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
077 1233 762, 077 9454 688

ஏழாலை கிழக்கு, ஏழாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தை செல்வா அவர்களின் 46வது நினைவு நாள் அஞ்சலியும் நினைவுப் பேருரையும்



தலைமை
ஓய்வுநிலை ஆயர் கலாநிதி சு.ஜெபநேசன் அவர்கள்
(தலைவர், தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு)

**1. மாலை அணிவித்தலும் மலர் அஞ்சலியும்**
காலம்:- 26.04.2023 புதன்கிழமை
நேரம்:- முற்பகல் 09.30 மணி
இடம் :- தந்தை செல்வா நினைவிடம்,
(தந்தை செல்வா சதுக்கம்) யாழ்ப்பாணம்.

**2.நினைவுப் பேருரை**
அருட்பணி அ.அ.நவரத்தினம் அடிகளார்
முதுநிலை விரிவுரையாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
(முற்பகல் 10.00 மணியளவில் தந்தை செல்வா நினைவிட வளாகத்தில்)
**விடயம் :- "தமிழ் தேசிய இனத்தின் விடுதலை வரலாற்றில் தந்தை செல்வா சாதித்தவைகள்"**

**3. அஞ்சலி நிகழ்ச்சி - தெல்லிப்பளை சேமக்காலை**
காலம் :- 26.04.2023 புதன்கிழமை
நேரம் :- பிற்பகல் 04.30 மணி
இடம் :- சேமக்காலை, கட்டுவன் வீதி, தெல்லிப்பளை

**மேற்படி நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**
**தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு**
**யாழ்ப்பாணம்.**

(CS 24593)A-1

# மரண அறிவித்தல்

பிறப்பு
27 . 03 . 1932



இறப்பு
24 . 04 . 2023

## திருமதி சிவபாக்கியம் பாலசுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

கொக்குவில் மேற்கு, மஞ்சவனப்பதியை பிறப்பிடமாகவும் ,தொல்புரம் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (24.04.2023) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற அதிபர் பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சிவபாலன் (பொறியியலாளர்-கனடா) கலாநிதி.பா.தனபாலன் (தேசிய கல்வியியற்கல்லூரி, சிரேஷ்டவிரிவுரையாளர்,கோப்பாய்), திருமதி சு.பாலகௌரி(ஆசிரியை,வட்டு.இந்து கல்லூரி), ஆகியோரின் அன்புத் தாயாரும் சுமதி, புஸ்பரதி (கனடா), திருமதி கர்ணி( சிறுவர் பூங்காமுன்பள்ளி பணிப் பாளர்,திருநெல்வேலி), சுவேந்திரன் (அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரி, விரிவுரையாளர், ) ஆகியோரின் மாமியாரும் சி. கிறீசன், சி. தரணீ சன், சு.ஆர்த்திகா (மொறட்டுவ பல்கலைக்கழகம்),சு.ஆகீசன்(யாழ்.இந்துக்கல்லூரி), சு. அனபாயன் (யா. பரியோவான் கல்லூரி), த.அபிநயா (யாழ். இந்துமகளிர் கல்லூரி) ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று வழுக்கையாறு இந்துமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## குலசேகரம்பிள்ளை புவனேஸ்வரி



தோற்றம்
13.02.1936

மறைவு
24.04.2023

மண்கும்பானை பிறப்பிடமாகவும் கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட குலசேகரம்பிள்ளை புவனேஸ்வரி அவர்கள் நேற்று (24.04.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சரவணமுத்து நாகம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளை அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம், சுப்பிரமணியம், சிவக்கொழுந்து ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஏரம்பு, தாமோ தரம்பிள்ளை, தருமலிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், ருக்மணிதேவி, அமரர் சரோஜினிதேவி, றஞ்சினிதேவி, சகுந்தலாதேவி, காலஞ்சென்றவர்களான குமாரவதனன், லலிதாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் இலகுநாதன், விஜயகுமார் ஆகியோரின் மாமியாரும், மயூரன் (AMT முகாமையாளர், வவுனியா), அமரர் செந்தூரன் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, வலி.கிழக்கு பிரதேசசபை உறுப்பினர், சமாதான நீதவான் J.P), கஜரூபன், மதனரூபன் (அக்ஷ ஹாட்வெயார்), யதுசன் (ஓம் சக்தி ஸ்ரோர்ஸ் அன்ட் மோட்டோர்ஸ்), அமரர் யதரூபன், கஜீந்தன், வாகீசன், பிரவீன் (பிரான்ஸ்), புவிசன் (பிரான்ஸ்), விஜிதா, லக்ஷிகா (பிரான்ஸ்), மதிவதணன், P.வாகீசன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கேசிகா, லவிக்கா (பிரான்ஸ்), தக்ஷிகா, மிதிலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2023) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**நாவல்கட்டை லேன்,**
**கோப்பாய் வடக்கு,**
**கோப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 6232 144,**
**077 4974 256**

(CS 24604)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்...

தமிழ்த் தேசியக் கட்சிகளால் ஓரணியாக விடுக்கப்பட்ட பொதுமுடக்க அழைப்புக்கு வடக்கு - கிழக்கை பிரதான தளமாகக் கொண்டு செயற்படும் அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. அத்துடன் தொழிற் சங்கங்களும் ஏற்று ஆதரவைத் தெரிவித்துள்ளன. இதன் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் முடங்கவுள்ளன. மக்களுக்கு பொதுமுடக்கம் காரணமாக ஏற்படும் அசௌகரியங்களைப் பொறுத்துக்கொள்ளுமாறும் அவை கோரியுள்ளன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள வர்த்தக சங்கங்களும் பொதுமுடக்கத்துக்கு ஆதரவளித்துள்ளமையால் அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்படவுள்ளன. பொதுச்சந்தை வர்த்தகர்களும் இன்றையதினம் தமது சந்தைகள் கூடாது என்பதை அறிவித்துள்ளனர். அனைத்து வகையான வர்த்தக நடவடிக்கைகளும் இன்று முடங்கும் என்று அவர்கள் தெரியப்படுத்தியுள்ளனர்.

அதேபோன்று போக்குவரத்துச் சங்கங்களும் ஆதரவைத் தெரிவித்துள்ளமையால் போக்குவரத்துச் சேவைகளும் நடைபெறமாட்டாது. முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கங்களும் ஆதரவு வழங்கியுள்ளமையால் அவற்றின் சேவைகளும் இடம்பெறாது. ஆசிரியர் சங்கமும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. ஆசிரியர்கள் கற்றல் நடவடிக்கையில் ஈடுபடமாட்டார்கள். மாணவர்களை கல்வி நடவடிக்கைக்கு பாடசாலைக்கு அனுப்பி பெற்றோர் வீணான அசௌகரியங்களுக்கு உள்ளாகவேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

நீதிமன்றங்களில் இன்று எந்தவொரு சட்டத்தரணிகளும் முன்னிலையாக மாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கடற்றொழிலாளர்களும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இதனால் இன்று மீன் சந்தைகளும் கூடமாட்டாது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இன்றைய பொதுமுடக்கத்துக்கு ஆதரவு வழங்குமாறு பல பொது அமைப்புக்களும் தமிழ், முஸ்லிம் அரசியல் தலைமைகளும் கோரியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.5)

## கண்காணிப்புக்...

துக்கும் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்படல்வேண்டும் என்ற கோரிக்கை உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நெடுந்தீவு பிரதேச செயலகம் முன்பாக அப்பகுதி மக்களால் நேற்றுத் திங்கட்கிழமை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின் முடிவில் நெடுந்தீவு பிரதேச செயலர் ஊடாக நெடுந்தீவுப் பொலிஸாருக்கு மனு அனுப்பப்பட்டது. அந்த மனுவில், நெடுந்தீவு மக்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தால் விழிப்புக் குழுக்கள் உருவாக்கப்படவேண்டும்.

நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தால் ரோந்துப் பணியினூடாக கண்காணிப்பதற்கு இடைவிடாது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

நெடுந்தீவின் சுற்றுலாத் தலங்களுக்கு ஒவ்வொருநாளும் சென்று நெடுந்தீவு பொலிஸ் நிலைய அதிகாரிகள் கண்காணிக்கவேண்டும்.

வெளியூர்களில் இருந்து வந்து நெடுந்தீவின் விடுதிகளில் தங்குபவர்கள் விடுதி உரிமையாளர்களால் பூரண ஆள் அடையாளத்துக்குட்படுத்தல் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தால் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

நெடுந்தீவுக்கு உள்ளேவரும் வெளியே செல்லும் மக்களின் தரவுகளை நவீன தொழில்நுட்பத்தைக் கொண்டு பயணிகளை சிரமப்படுத்தாது அதிவிரைவாக தரவுகளை இறங்குதுறையில் வைத்து சேமித்துக் கொள்ளும் நடைமுறையை கொண்டுவரவேண்டும் - என்றுள்ளது. (அ-ஒ.20,26)

## நெடுந்தீவுக்...

சந்தேகநபர் வழங்கிய தகவலின் அடிப்படையில் கொலை இடம்பெற்ற வீட்டின் பின்புறமாகவுள்ள கிணற்றிலிருந்து கொலைக்குப் பயன்படுத்திய கத்தியும், சந்தேகநபர் அணிந்திருந்த சாரமும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நெடுந்தீவு, மாவிலி இறங்குதுறையை அண்டிய 12ஆம் வட்டாரத்தில் கடற்படை முகாமுக்கு அண்மையிலுள்ள வீடொன்றில் இருந்து வெட்டுக்காயங்களுடன் ஐவரின் சடலங்கள் கடந்த சனிக்கிழமை மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் அன்றைய தினம் இரவே புங்குடுதீவில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தார். அவரிடமிருந்து நகைகள் மாத்திரம் மீட்கப்பட்டிருந்த நிலையில் நேற்றையதினம் கொலைக்குப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் தடயப் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன. (அ-ஒ.26)

## இன்றைய...

மயமாக்கலை முன்னெடுப்பதற்கு எதிராகவும் இன்று முன்னெடுக்கப்படவுள்ள பொதுமுடக்கத்துக்கு பல்வேறு வர்த்தக சங்கங்களும் ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளன.

வவுனியா வர்த்தகர் சங்கத்தின் விசேட கலந்துரையாடல் நேற்றுக் காலை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, வவுனியாவில் அனைத்துக் கடைகளையும் மூடி, பொது முடக்கத்துக்கு முழுமையாக ஆதரவளிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்தின் சிகையலங்காரிப்பாளர் சங்கம், முச்சக்கர வண்டிச் சாரதிகள் சங்கம் உள்ளிட்ட பல சங்கங்கள் ஏற்கனவே போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு, உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, முள்ளியவளை, ஒட்டுசுட்டான், மாங்குளம், மல்லாவி ஆகிய வர்த்தக சங்கங்கள் பொதுமுடக்கத்துக்கு முழுமையான ஆதரவு வழங்கவுள்ளதாகவும் தமது பகுதிகளிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்படும் எனவும் அறிவித்துள்ளனர். யாழ்ப்பாண வணிகர் கழகம் ஏற்கனவே பொதுமுடக்கத்துக்கு ஆதரவு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**தனியார் பணியாளர்கள் செல்லத்தேவையில்லை**

இதேவேளை - வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தனியார் ஊழியர்கள் எவரும் இன்று பணிக்குச் செல்லத் தேவையில்லை என வடமாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது. அந்தச் சங்கத்தின் தலைவர் சாமிநாதன் சிவகுமார் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (அ-ஒ.5)

## தெற்கு...

மன்றில் என பல மாற்றங்கள் இடம்பெறவுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட பல எதிர்க்கட்சிகளில் இருந்து முதற் கட்டமாகக் கிட்டத்தட்ட 28 பேர் அரசுடன் இணைவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக ஆளும் தரப்பு வட்டாரம் தெரிவிக்கின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கமானவர்களுக்குப் புதிய அமைச்சரவையில் பலமான அமைச்சுக்கள் வழங்கப்படவுள்ளன என்று அந்தத்தகவல்கள் கூறுகின்றன. ஜனாதிபதியின் திட்டம் தேசிய அரசை அமைப்பதுதான் என்றும், அதற்கான அழைப்பை அவர் எல்லாக் கட்சிகளுக்கும் உத்தியோகபூர்வமாக விடுக்கவுள்ளார் என்றும் அந்தத் தகவல்கள் மேலும் கூறுகின்றன. (அ-ஒ.22)

## அசௌகரியங்களைப்...

இதை உணர்ந்து கடற்றொழிலாளர்கள்தமதுதொழில்களைப்புறக்கணித்து, சந்தைகளை இடைநிறுத்தி இன்றைய பொதுமுடக்கத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும் என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் முன்னாள் தலைவரும், ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் சமாசத்தின் செயலருமான அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அரச அதிகாரிகளாலும் இந்த அரசாங்கத்தாலும் மீனவர் சமுதாயத்தின் குரல்வளைகள் நசுக்கப்படுகின்றன. நசுக்கப்படுகின்ற பொழுதே நாங்கள் இவ்வாறான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். நசுக்கிய பின்னர் நாங்கள் போராட்டங்களை முன்னெடுக்க முடியாது. எங்களுடைய கடலையும் கடல் வளத்தையும் எங்களுடைய இருப்பையும் பாதுகாப்பதற்கு தமிழ்க் கட்சிகள் ஓரணியில் முன்னெடுத்து இருக்கின்ற கதவடைப்புப் போராட்டத்துக்கு அனைவரும் ஒட்டுமொத்த ஆதரவை வழங்க வேண்டும்.

நாங்கள் எவ்வளவோ அசௌகரியங்களையும் துன்பங்களையும் கடந்து வந்த இனம். எனவே பொதுமுடக்கத்தால் ஏற்படும் அசௌகரியங்களைப் பொறுத்து ஆதரவு வழங்கவேண்டும் - என்றார். (அ-ஒ.125)

## தாயகத்தில்...

தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து இருபிரதான கோரிக்கைகளை முன்னிறுத்தி முழுமையாக தமிழர் தாயகத்தை முடக்கி தமிழர்களின் முழுமையான எதிர்ப்பையும், இனியும் தமிழர்கள் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள் என்பதை சர்வதேசத்துக்கும், சிங்களப் பேரினவாதத்தை எச்சரிக்கும் முகமாகவும் நடைபெறவுள்ளதால் தாயகமே திரண்டு வெற்றி பெறச் செய்யுமாறு அன்பாகவும், உரிமையுடனும் வேண்டுகோள்விடுக்கின்றோம்.

பயங்கரவாத எதிப்புச்சட்ட வரைவு என்ற சிங்களப் பேரினவாத அரசின் திட்டத்தை தோற்கடிப்பது, தமிழர்களின் மரபுவழித் தாயகமான வடக்கு - கிழக்கில் எமது வரலாற்றுப் பாரம்பரியத்தையும், தொன்மையையும் சிதைக்கும் நோக்குடன் தமிழர்களின் தொன்மையான வழிபாட்டுத் தலங்கள் மீதுதிட்டமிட்டு நடைபெறும் சிதைப்புகள், தாக்குதல்களைத் தடுத்து நிறுத்துதல் ஆகிய இரு முக்கியமான கோரிக்கைகளோடு தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்து தமிழினத்துக்காகச் செயலாற்றுவதை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வரவேற்பதுடன் தமிழர்களின் விடுதலைக்காக ஏனைய தமிழ்த் தேசிய சக்திகளும் இணைவது காலத்தின் கட்டாயம் என்பதையும் வலியுறுத்தி நிற்கின்றது. போராட்டம் வெற்றி பெற அனைவரையும் ஒத்துழைக்குமாறும், பங்குபற்றுமாறு அன்புக்கட்டளையாகவும், உரிமையுடனும் மீண்டும் வேண்டுகின்றோம் - என்றுள்ளது. (அ-ஒ.இ)

## பயங்கரவாத...

டுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, சுதந்திர மக்கள் சபை (டலஸ் அணி), உத்தர லங்கா சபாகய (விமல் அணி), சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி, அநுர பிரியதர்ஷன யாப்பா அணி ஆகியவற்றின் உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டவரைவை தோற்கடிப்பதற்கும், அதற்குப் பதிலாக புதியதொரு சட்ட வரைவை அறிமுகப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கை உள்ளிட்ட விவகாரங்கள் பற்றியும் இந்தச் சந்திப்பின்போது பேசப்பட்டுள்ளது. (அ-ஒ.44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமுடக்கத்துக்கு ஆதரவு தாருங்கள்

## சிறீதரன் எம்.பி. அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 25

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கைவிடவேண்டும், வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்படும் சிங்கள-பௌத்த மயமாக்கலை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்னும் கோரிக்கைகளை முன்னிறுத்தி, வடக்கு-கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் பொதுமுடக்கத்துக்கு தமிழ் மக்களும், சிவில் சமூக அமைப்புக்களும், மக்கள் பிரதிநிதிகளும் முழுமையான ஆதரவை வழங்க முன்வரவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார். (அ-ஒ,113,125)

# வட மாகாண தனியார் பேருந்து சங்கம் ஆதரவு

வடக்கு மாகாண தனியார் பேருந்து சங்கமும் பொதுமுடக்கத்துக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகசந்திப்பில் அதன் உப தலைவர் எஸ்.டி.கே.ராஜேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள தனியார் போக்குவரத்துக்கள் இன்று இடம்பெறமாட்டாது. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நாங்களும் முழுமையாக எதிர்க்கின்றோம். ஏற்கனவே, பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழர்களாகிய நாங்கள் பல இன்னல்களை அனுபவித்திருக்கின்றோம். ஆகவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு நாங்கள் எமது எதிர்ப்பை தெரிவிக்கின்றோம்' -என்றார். (அ-ஒ,125)

# நாட்டுப்பற்றாளரைத் திரட்டி தேர்தலில் களமிறங்குவோம்

## அத்துரலிய ரத்ன தேரர் தெரிவிப்பு

நாட்டுப்பற்று தொடர்பில் சரியாகச் சிந்திக்கக்கூடிய எல்லாத் தரப்பினரையும் ஒன்றிணைத்து அடுத்த ஜனாதிபதித் தேர்தலின்போது நாம் அந்தத் திட்டத்துக்குள் நுழைவோம். ஜனாதிபதியைத் தீர்மானிக்கும் சக்தியாக நாம் விளங்குவோம் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:-

நாட்டை வீழ்ச்சியடையச் செய்த ராஜபக்சக்களை வரலாறு ஒருபோதும் மன்னிக்காது. அவர்களின் குடும்ப ஆட்சியின் ஆதிக்கம் மக்கள் மத்தியில் என்றோ ஒழிந்துவிட்டது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் சவாலை ஏற்றுக்கொள்ளும் திறமை இல்லை. நாட்டுப்பற்று தொடர்பில் சரியாகச் சிந்திக்க கூடிய தரப்பினரையும் ஒன்றிணைத்து அடுத்த ஜனாதிபதித் தேர்தலின்போது நாம் அந்தத் திட்டத்துக்குள் நுழைவோம். ஜனாதிபதியைத் தீர்மானிக்கும் சக்தியாக நாமே இருப்போம் - என்றார். (ச-22)

# பொதுமுடக்கத்துக்கு 'பொபொ'வும் ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 25

வடக்கு -கிழக்குத் தழுவிய பணிப் புறக்கணிப்பு மற்றும் கதவடைப்புப் போராட்டத்துக்குப் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் முழுமையான ஆதரவு வழங்குவதாக நேற்று அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை பேரெழுச்சி இயக்கத்தின் சார்பாக அதன் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான தவத்திரு வேலன் சுவாமிகள் நேற்றுத் திங்கட்கிழமை மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த்தேசிய உணர்வாளர்களாக ஒவ்வொரு தமிழனும் இந்தப் பணிப் புறக்கணிப்பு மற்றும் கதவடைப்புப் போராட்டத்துக்கு பூரண ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்குவதன் ஊடாகத் தமிழ்த்தேசமாக எழுச்சியுற்று எமது ஒற்றுமையையும், எழுச்சியையும் சர்வதேசத்துக்கு எடுத்துச் சொல்வோம்.

அனைவரும் தமிழர்களாக ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தில் எமது பூரண ஆதரவை வெளிப்படுத்தி நிற்போம்,- என்றார். (அ-ஒ,66)

## காலணி வாங்கித் தரவில்லை

# மாணவன் தவறான முடிவெடுத்து உயிரிழப்பு

உதைபந்தாட்டத்துக்குத் தேவையான காலணியை வாங்கித் தரவில்லை எனத் தெரிவித்து 14 வயது மாணவன் தவறான முடிவு எடுத்து நேற்று உயிரிழந்துள்ளான்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

மாணவனது குடும்பத்தின் வறுமை நிலை காரணமாக தந்தையால் உடனடியாக காலணியை வாங்கிக் கொடுக்க முடியவில்லை. இந்நிலையில் மாணவன் தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளான். (ஒ-25)

# யாழ். வலய சட்டத்தரணிகள் பொதுமுடக்கத்துக்கு ஆதரவு

யாழ்ப்பாண வலய சட்டத்தரணிகள் வடக்கு-கிழக்கில் இடம்பெறவுள்ள பொது முடக்கத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ். வலய நீதிமன்றங்களில் முன்னிலையாகமாட்டார்கள் என சட்டத்தரணிகள் சங்க யாழ்ப்பாண வலயத் தலைவரும் யாழ்ப்பாண நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத் தலைவருமான பாலசுப்பிரமணியம் தவபாலன் தெரிவித்தார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் யாழ். வலயத்துக்குட்பட்ட ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி, மல்லாகம் ஆகிய 5 நீதிமன்றங்களிலும் சட்டத்தரணிகள் முன்னிலையாகாமல் பொதுமுடக்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-ஒ.125)


## வேலையாள்கள் தேவை

பூக்கன்றுகள் விற்பனை நிலையத்துக்கு ஐந்து நபர்கள் வேலைக்காகத் தேவை.

உடன் தொடர்புகளுக்கு:-

075 944 4601

(CS24589)AH-1

## தேவை

யாழ்நகரில் இயங்கும் புத்தகவிற்பனை நிலையத்துக்கும் ஹாட்வெயர் கடைக்கும். வேலையாள்கள் தேவை.

1. விற்பனை பிரதிநிதி (ஆண் / பெண்)
2. உதவியாளர் (ஆண் / பெண்)

077 494 9683, 077 077 6469

## பணிப்பெண் தேவை

சாவகச்சேரியில் அமைந்துள்ள வீடு ஒன்றுக்கு வீட்டுப் பணி பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 077 1377

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 15 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீருற்று நிலம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்
- 1 பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும் (120,000/=)

பார்வையிடும் நேரம் : காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை

தொடர்பு:-076 755 8606 077 638 5683

## காணி விற்பனைக்கு உண்டு

* யாழ்ப்பாணம் புத்தூரில் 27 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்

* மூன்று பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.

* நன்னீருற்று

* குடியிருப்பு சூழவுள்ள பகுதி

பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.

(முழுக்காணி களும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது).

(ஒரு பரப்புக் காணியின் விலை மூன்று இலட்சம் (300,000/=)



தொடர்பு:

077 4683 354

076 9119 371

076 7390 413

## VISAS



சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

1. Invitation letter of visitor visa to Canada
   கனடா செல்வதற்கான Summer Camp Invitation letter ஏற்பாடு செய்து தரப்படும்.
   The Summer Camp courses are maximum for 4 weeks (Adult and families with children can apply. We have packages for families too. )
2. Canada Work and Study programs (Minimum Qualifications A/L with 3 years' work experiences in related field)
   IELTS தேவையில்லை.

NALTC

134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.

0770385584

CS24603 (A-1)

## கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை - மானிப்பாய் பதவி வெற்றிடம்

1. தாதிய உத்தியோகத்தர் (தாதிய டிப்ளோமா - ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்)
2. தாதிய உதவியாளர் ( Certificate Course in Nursing Assistant )
3. மருந்தாளர்

விண்ணப்பப் படிவங்களை நேரடியாகவோ அல்லது மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

(CS24591) AH-1

அனுப்ப வேண்டிய முகவரி : கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை காரைநகர் வீதி, மானிப்பாய்.

Email - greenmemorial2010@gmail.com

நேர்காணல் தொடர்பான விவரம் தொலைபேசி மூலம் அறிவிக்கப்படும்.

## வீடு வாடகைக்கு

பருத்தித்துறை 4 ஆம் குறுக்குத் தெருவில் 3 படுக்கை அறைகள் வரவேற்பறை, கழிவறை, இணைந்த குளியலறை மற்றும் வாகனத்தரிப்பிட வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. (அமைதியான சூழல்)

077 210 3143


## தசாக கிருஹயக்ஞ அழைப்பு



நிகழும் சோபகிருது வருடம் சித்திரை மாதம் 17 ஆம் நாள் (17.04.2023) திங்கட்கிழமை சதய நட்சத்திரம், அபர பட்ச துவாதசி திதியில் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

காசிப கோத்திரம்

பிரம்மஸ்ரீ அண்ணாச்சாமி ஐயர் பிரேமச்சந்திரக்குருக்கள்

அவர்களது ஆத்ம சாந்தி கிரியைகள் பின்வரும் தினங்களில் இடம்பெறும்.

- 25.04.2023 - (சித்திரை 12)செவ்வாய் - தசாகம்
- 26.04.2023 - (சித்திரை 13)புதன் - ஏகோதிஷ்டம், மாசிகம்
- 27.04.2023 - (சித்திரை 14)வியாழன் - சபிண்டீகரணம்
- 28.04.2023 - (சித்திரை 15)வெள்ளி - கிருஹயக்ஞம்

மேற்படி கிரியைகளிலும், 28.04.2023 அன்று மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

"உதயகிரி"
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

குடும்பத்தினர்.

(cs 50174) (N-1))

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.